உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

இருபத்துநான்காந்தொகுதி.

Vol. XXIV.

குரோதன— அக்ஷய௵

1925-1926.

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

உ

செந்தமிழ்

இருபத்துநான்காந்தொகுதியின்

உள்ளுறை:—

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அசோகன்:-	ஸ்ரீமத். வித்வான், ஆ. மா. சடகோப ராமாநுஜாசாரியர்.	உ௮க
அமிதசாகரர்:-	„ மு. இராகவையங்கார்.	கஈக
அழகு:-	„ ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L.	சஎ௫
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக் குறிப்பு:-		௩0௫
இராஜராஜதேவருலா:-	ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர்.	சகூ
இராஜாதித்தன்:-	ஷை	சஎஎ
உலகியல்விளக்கச் சீர்தூக்குக்கட்டுரை:-	ஸ்ரீமத். ச. சுப்பிரமணியசாஸ்த்ரியார்.	ச௮0
ஐயவினு:-	„ பெரி. டெ௱. சுப. ஜகநாதன் செட்டியார்.	கஎஉ
ஐயவினுவுக்குவிடை:-	„ சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.	கஎஉ
ஒரு சிறப்புப்பட்டம்:-	பத்திராதிபர்.	௫௮
கம்பராமாயண இன்கவித்திரட்டுத் திருத்தக் குறிப்பு:-	ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.	௮க
கம்பராமாயண இன்கவித்திரட்டு:-	ஷை ஷை	க௩க, கஎ௩, உ0கூ, உசகூ, உகூகூ, ௩சஎ, ச0க, ச௩கூ, ச௮க.

கம்பர் திருநாள்:— ௧௩0

கம்பர் திருநாள்:— ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L. ௧௯௩

காதல்:— ,, ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L., ௪௭௩

கீழ்வேளூருலா:— ,, சோமசுந்தரதேசிகர். ௨௨௫, ௨௫௭.

கொண்கானத்து நன்னன்:— ,, வித்வான். ஆ. மா. சடகோப ராமாநுஜாசாரியர். ௪௪௯

சதுரங்கநூல்:— உதவிப்பத்திராதிபர். ௧௭௭

சுக்கிரநீதி:— பத்திராதிபர். ௩௯௭

சைவசமயத்தைச் சார்ந்த ஓர் உலா நூல் } ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., ௮௬

தசாதன் குறையும் கைகேயி நிறையும்:— } ,, ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L., ௧, ௫௯, ௮௯, ௧௩௭.

தமிழ்ச்சொல்லமைப்பு:— ,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியார். ௪௯௯

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— ௩௧௧

திருவள்ளுவர்:— ஸ்ரீமத். ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L. ௩௩௭, ௩௭௭

நத்தம்போற்கேடென்னுங் குறளுரை:— } ,, திரு. நா. அப்பனையங்கார். ௪௩௩

நந்திக்கலம்பகம்:— ,, பண்டித. அ. கோபாலையர். ௩௧௩

நந்திக்கலம்பகத்திற் சில பிரதிகளில் அதிகமாகக் காணப்பட்ட பாட்டுக்கள்:— } ௸ ௸ ௩௬௧

நற்றிணைநாற்பது:— ஸ்ரீமத். K. S. நவநீதகிருஷ்ணபாரதி. ௩௩௫, ௩௯௬.

நெடுநெல்வாடை:— ,, சி. வீரபாகுப்பிள்ளை. ௨௫

பதினெண்கீழ்க்கணக்கு:—ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர். ககஎ

பராந்தகன் I:— ஷ ௨௬௧

பிழைதிருத்தம்:— அ0, க௨௬, ௩௬௬.

மதிப்புரை:— அ௩, ககரு, கஎக, ௨0அ, ௨௬அ, ௬எ௨, ௫0ரு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வர்வு செலவு கணக்கு:— (பகுதி ௨, ௩, ௬, ரு, ௬, எ.)

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— எ௬, ௨ருரு.

மிழலைச்சதகம்:—உதவிப்பத்திராதிபர். க௬

மேல்புலக்கல்விமுறைகள்:-ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர். ௨௨க

வாழ்த்துப்பாக்கள்:— ,, மே. சொ. சுப்பிரமணியக் கவிராஜர். ௨எஅ

ஜாதிமதவேற்றுமையும் சமுதாயஒற்றுமையும்:— ,, ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L., ௬கஎ

ஸர்வஜன ஜபம்:— ,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார். எரு

ஸ்வப்னவாசவதத்தம்:— ,, ஜி. ஹரிஹரசாஸ்த்ரியார். ௩௬ரு, ௬௬எ, ௬அ௬.

இத்தொகுதியில் வெளிவந்த நூல்:—

[முற்றுப்பெறாதது.]

பெருந்தொகை:— ஸ்ரீமத். மு. இராகவையங்கார். (க, ௨, ௬, ரு, ௬, எ, கூ, க0, க௨ பகுதிகள்.)

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உச] குரோதனஹ கார்த்திகைமீ [பகுதி க.
Vol. XXIV. November-December-1925. No. 1.

தசரதன்குறையும் கைகேயிநிறையும்.

[1916-ம் வருடத்திற் கரந்தைத்தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவிற் செய்த உபந்யாசவிரி.]

பகுதி—க: முன்னுரை.

ஒழிவுநேரத்தைப் பழந்தமிழ்நூல்கள் படிப்பதிலும், அவைபற்றிச் சிந்திப்பதிலும் செலவிடுவதில் மிக விருப்பமுடையேன். சில ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் இராமாயணகதைப்பாத்திரங்களின் இயல்பு நெறி ஒழுக்கங்களைச் சிந்திக்கையிற் சிறிது சந்தேகம் எழலாயிற்று. அது, இராமனுக்கும் பரதனுக்குஞ் சிறுபருவமுதலே யேற்றக்குறைவற்று ஒத்த மரியாதைகள் காட்டப்பட்டதான இடங்களைக்குறித் தெழுந்தது. மன்னர்மக்களுள், பட்டத்திற்குரிய மூத்தபுத்திரனுக்கு விசேஷமரியாதையும், மற்றச் சோதரருக்குச் சமநலங்களு மேற்படுவதே முறையு மியல்பு மாகும். இவ்வாறன்றி, இருவருக்குமேற்பட்ட பிராதாக்களுள், இருவருக்குச் சமமதிப்பும், மற்றையானைவருக்கும் அவ்விருவருக்குக் குறையச் சரிமரியாதைகளும் அமைவதற்கு வேறு தக்க காரணம் வேண்டும். கௌரவர் நூற்றுவருள், சுயோதனனுக்கே தனிமுதற் பதவியும் தம்பியர் பணிவு மேற்படுவதும், பாண்டவருள், தருமனையே தம்பியர் நால்வரு மொக்கத் தாழ்தலுந் தகவுடைத்தாம். தசரதன் மக்களுள் மட்டும், இராமனுக்குப்போலவே பரதனுக்கு மிராஜமரியாதைகளேற்பட்டதோடமையாது, மாற்றன்னைமக்களுள்ளும் இராமனுக்கும் பரதனுக்குந் தனித்தனியே ஒவ்வொருவர் பணித்துணைவராகி யேவலேற்றிருக்க நியாய மென்னை? தக்க நியாயமின்றி நிகழொணு விக்காரியத்துக்குக் காரண மாராயவேண்டுமென் றெண்ணினேன்.

உடனே கம்பராமாயணத்தைச் சிறிதாழத் துருவிப் படிக்கலானேன். என் ஆராய்ச்சியிற் கிடைத்தவற்றைச் சொல்லத் துணிகின்றேன். நான் கண்டதே துணிந்த முடிபென்னுங் கொள்கையுடையனில்லை. எனக்குத் தோற்றியதை வெளிப்படுத்துவதன்மூலம், என்னிற் றகவு மிகவுடைப் புலவர் தம்போராய்ச்சியின் நன்முடிபுகளை வெளிப்படுத்தித் தமிழுல குக் குபகரிப்பதோடு, கற்றூர் பலரையு மாழச் சிந்திக்கத் தூண்டுவதே என் முக்கியநோக்கம். இந்நோக்கமே இத்தகைய ஆராய்ச்சிகளி லென்னை யூக்குவதோடு, எனக்குத் தோற்றியதை வெளிப்படுத்தவும் தூண்டுவதாகும்.

கம்பராமாயணத்தை நான் படித்துவருங்கால், 'மந்தரைசூழ்ச்சி', 'கிளைகண்டுநீங்குபடல'ங்களிற் சில கவிகள் என்மனதை வலித்திழுத்து நிறுத்தி, நிறுத்தநிதான வாராய்ச்சியிற்புகுத்தின. அக்கவிகளுக்குநான் முன்கொண்டதும் கேட்டதுமான, பொருள் பொருந்தாமையால், துருவிச் சிந்திக்கச் சில புதைபொருளுண்மை தோன்றுவதாயிற்று. ஐயமகற்ற விரும்பி முதனூலாம் வான்மீகம், பண்டிதர் பிரம்மஸ்ரீ அநந்தாசாரியர் தமிழ்மொழிபெயர்ப்புடன் வெளிவந்ததை வாங்கி ஒத்து நோக்கினேன். அதன் பயனாய்க் கம்பர் கவிக்கருத்து தெளி வும் வலிமையு மடைவதாயிற்று.

சாதாரணமாகக் கைகேயியறக்கொடியாளென்றும், தன் கணவ னிடங் காதற் கிழமையும் இராமனிடத் திரக்கமு மில்லாத வன்னெஞ் சுடையாளென்றும், நா மெண்ணுகிறோம். இவ்வெண்ணமேறி, நம் மபிப்பிராயங்களை நாமுணராமலே பேதிப்பதால், கைகேயியைப்பற்றிய கதையனைத்து மியல் நிறமாறித் தோன்றுவதாகும். வான்மீகரும், கம்பரும் ஒப்புயர்வற்ற கற்பரசியாக் காட்டவும், அப்பெரும்புலவர் கதை யமைப்பும், கவிக்கருத்து மோராது நாம் அவளைப் பழித்து நிந்திக் கின்றோம். இராகவனுக்குரிய அயோத்தியரசைப் பறித்துத் தன்மகன் பரதன்பாற்சேர்த்து, இராமனைத் தனிக்கொடுமைநசையால் வனம் புகுத்தித் தன்காதலன் மரணத்துக்குமே காரணமாய், அருளேயுமன்றிக் கற்புங் குன்றிய காதகியா நாங் கருதுங் கைகேயியைத் "தெய்வக்கற்பி னாள்," எனக் கம்பர் பன்முறை வாயார வாழ்த்தக் காண்பாம். உண்மையி லரசு பரதனதாயின்; அவனை யூரகற்றி யவனில்லாதபோ தவனன்புடைச் சுற்ற மறியாம லவன்முடியை, உரிமையற்ற விராமனுக்குத் தசரதன் சூட்டச் சூழ்ச்சிசெய்ததை யறிந்த கைகேயி, காதனிறை கற்புமுறையாற்

கணவன் சொல்லறமிறவாதோம்பி யவன்பழியைத் தனதாக்கிக் கொண் டிருப்பின்; நிந்திக்கும் நாம் அவளைத் தூயகற்பின் துறைபோய நங்கையா வந்திப்பதே யமைவுடையறமாமன்றோ? நாம் சொல்வழக்கிற் கேட்டுவைத்த கதை, பரதனுக்காகக் கைகேயி இராமனுக்குரிய அரசை வஞ்சச்சூழ்ச்சியால் வலிந்து வாங்கினதாக்கொள்ளவும், வடமொழிப் பொய்யில்புலவனும், என்றுமுள தென்தமிழ் வான்மீகியும் பரதனரசைத் தசரத னிராமன்சார்பாக வஞ்சித்துப் பறிக்க முயன்றதாகக் கூறுவரேல் நம்மதிசய மெனைத்தாகுமெனச் சிந்தியுங்கள். நா மதிசயிக்கத்தக்க விதுவே உண்மையென்பதைக் கம்பர் வான்மீகர்கவிகளா லிங்குக்காட்ட முயல்வேன்.

பகுதி-2: கம்பர்கவிக்கருத்து

"இராமன் கோமுடி சூடுவன் நாளை" என்று மந்தரைவாய்க் கேட்டதும், "தூயவள்", கைகேயி, இராமன்பாலுள்ள தன் "பேரன்பெனு மளக்கர் ஆர்த்தெழ", உள்ள நிகழ்ச்சி யொளியாது காட்டுந் தன் "தேய்விலாமுகமதி விளங்கித் தேசுற, மிக உவகைபோய்ச் சுடர்க் கெலா நாயகமனையதோர்மாலை"யை மந்தரைக் கவளுரைத்த நன்மாற்றத் திற்கு வெகுமதியா "நல்கினள்". இராமன்பாற் காழ்த்த பகையா விதை வெறுத்து, அரசி தந்த பொன்மாலையை நிலங்குழிய வெறிந்து வெகுண்டகூனி இராமனையு மவன்பா லன்புடைமைக்காகக் கைகேயியை யும் பலவாறு சுடும் பழிசொல்லிப் பரிவாற் பரதனுக்குப் பட்டங் கேட்கும்படி "வாய்கயப்புற" வழங்கிய வெஞ்சொற் கேட்ட கைகேயி பொறுதாளாய்,

> "எனக்கு நல்லையுமல்லை, நீ என்மகன் பரதன்
> தனக்கு நல்லையுமல்லை, தருமமே நோக்கில்
> உனக்கு நல்லையுமல்லை....................
> ....மதியிலா மனத்தோய்;"

'உன்புலைச் சிந்தையா லென்சொனாய்? தீயோய்?'; 'நீதியல்லவு நெறிமுறை யல்லவு நினைந்தாய்'; 'நின் புன்பொறி நாவைச் சேதியா (துன் முதுமை யாலிது) பொறுத்தனன்';......அறிவிலி அடங்குதி;.......என் எதிர் நின்றுபோதி; எனத் தன்மனத்தே மூண்டெழுங் கதங்கனற்றத் தண்ணளி பொழியுந் தன் "கண்கள் சிவப்புற," நோக்கிக் கடிந்துகூறினள்.

இதற்கு மஞ்சி யகன்றிலா மந்தரை, அரசி யடிமிசை வீழ்ந்து, பரதன் பாற் பரிவும் இராமன்மேல் வெறுப்புமூட்டி அரசியலாக்கத்தைப் பரத னெய்தச்செய்ய முயலுமாறு தன்னரசிக்குப் பல்வேறுநியாயங்களைப் பலபடப் பன்னி மன்றாடவு மறுத்த வுறுதி மன மங்கையர்க் கரசி, தசரதன் 'தேவி, தூயசிந்தையும்......தீய மந்தரை ஒருரை செப்பலும் திரிந்தது,' என்பர் கம்பர். அறநெறிபிறழா துண்மையி லுறுதியா நிலைத்த தெய்வக்கற்பினுள் தூயசிந்தையைத் திரித்த ஊழுரைபொதிந்த கவிக் கருத்தை யீண்டுச் சிறிது துருவி யாராய்வோம்.

> " கெடுத் தொழிந்தனை யுனக்கரும் புதல்வனை; கிளர்நீ
> ருடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
> கொடுத்த பேரா சவன்குலக் கோமைந்தர் தமக்கும்,
> அடுத்த தம்பிக்கு மாம்; பிறர்க் காகுமோ? வென்றாள்":—

என்ப திக்கவியாகும். "ஒப்பற்ற மகனாய இராமனுக்கென்றே அயோத்தி நாடுடைய தசரதமன்னன் கொடுக்க விருக்கும் இறைமையாக்கம், அதைப் பெறு மிராமனுக்கும், அவன்வழிப் பிறக்கு மிறைமக்களுக்கும், இராமனை யடுத்து நிற்குந் தம்பி இலக்குவனுக்கு முதவுமல்லால், பரதன்முதலாய பிறர்க் குதவுவதில்லை. இராமன் முடிசூடப் போவதாக் கேட்டு மதைத் தடுக்கமுயலாது மகிழ்ந்திருக்கும் நீ, உன் கையறவால் உன்னருமைப் புதல்வனாய பரதனைக் கெடுத்துவிடுவை," என்ற நேர் பொருளும், அதன் சுட்டெச்சமாகப் "பரதனுக்குக் கேடுறாமற் காத்து வாழ்வளிக்க விரும்புவையேல், நான் சொல்லியவண்ண மவனுக்கே முடிசூட்டுவிக்க முயலுவை," என்ற தோற்றுவிாய்த் தேற்றப்பொருளுமே இச் செய்யுளுக்குச் சாதாரணமாகக் கொள்ளக் கேட்கின்றோம். இப்பொருள் "தூய்மொழி மடமான்" அறங்காழ்த்த நல்லியல்புக்கும், கூனி - கைகேயி சம்வாத வமைப்புமுறைக்கும், கம்பர் செம்பொருட்டுறைக்கும், முன்பின் கவிகட்கும் முரணுவதோடு, கைகேயியின் தெய்வக் கற்புக்கும் பொருந்தாதாகும். இராமன முடிசூடில், பரதன் அவந்தனாய், இறவாப்பிணம்போற் றிருநீக்கப்பெற் றலக்கணுறுவான்: இராமனாசெய்த இளையவனும் கோசலையுந் திருவெய்துவர்: பரதனு மவன்தாயும் தஞ்சமற்ற பஞ்சையராய்த் தயங்குதல் சரதம். இராமன்வாழ்வு பரதன் தாழ்வேயாமாதலின் அது தடுக்கற்பாற்று என முன் பன்முறையுங் கூனி பன்னியதைச் செவிகொடாது வெறுத்த பெருந்தேவியின் சலியாத தூயசிந்தை, அதையே மீட்டுங் கேட்டுத் திரிந்த தென்பது பொருந்துவதாமா?

அன்றியும் கைகேயியினியல்பும், மனப்பண்பும், அறிந்து, அவற்
றிற்குப் பொருந்தக் கவிப்பொருள் காண்பதே முறையாம். அன்பளவிற்
றசாதன்மக்கள்நால்வர்க்கும் வேற்றுமைகாணுதா ளிவள்; இராமனிடத்
திணையற்ற அன்பும், கணவன்பாற் கரைகடந்த கற்புடைக்காதலு
முடைய சுசீலை: ஆகவே, இவள் இராமனுடைமையைப்பறித்துப்பாதனுக்
குரிமையாக்கித்தரவிரும்புந் தூர்த்தளாவளோ! தசாதன் இராமனுக்குத்
தாவிரும்பு மிளவரசைத் தடுக்க எண்ணி வந்த கூனி, "கடைக்கண் ணளி
பொழியப் பொங்கணைமேற் (றூங்கிக்) கிடந்தாளைச் செம்பொற்சீரடி
தீண்டித்"த் துயிலெழுப்பி, 'உன்னைப் "பேரிடர் பிணிக்க நண்ணவும்,
(அதற்கு) உணங்குவாயல்லை: (வரும் பெருங்கேடுணராது) உறங்குவாய்",'
என்றுரைக்கத் தன்னரசிக்குரைத்தபோது, கைகேயி சொல்லும் பதிலால்
அவளுண்மைக் குணமும் மனப்பான்மையும் துளக்கமற விளக்கமாகும்.
கொடுமனக் 'கூனி வந்து முதலிற்கண்ட கைகேயியின் உறக்கநிலை
யொன்றே, அவள் மாசுறுமனத்துறக்கஞ் சொல்லும். சிசுக்களெல்லாம்
தூக்கத்தில் அழுக்கற்ற தம் அகமலர்ச்சி விளக்கி விகசிக்கு முகமுடைய.
பாவம்பழகுபருவமுற்றபின்னரே, மனிதர் அவசத்துயினிலையில், தத்தம்
முகத்தியல்பால், தாம் நனவுநிலையில் மறைத்துள தம் மனப்பாங்
குணர்த்துவாராவர். உள்ளத் தோயாதூறு மருளுடைய கைகேயி
நனவுநிலையிற் பல்லார்மாட்டும் ஒல்லும்வாயெல்லாம் இறைத்தூட்டுந்
தண்ணளி, அவள் துயிலுங்காற் செலவின்றி நெஞ்சநிறைந்து, ததும்பி
இருவிழிப் புறமடைக்கடை வழியுஞ் செவ்வியைக் கம்பர்; "பாற்கடற்
படுதிரைப் பவளவல்லியே-போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந்தாள் தனை, விரைவினெய்தினள்" கூனி, என் றினிது விளக்கி
யுள்ளார். இவ்வாறு தொடர்புபற்றி முளைத்தெழு மன்பு, நல்லியல்பால்
நாளும் விளைந்து முதிர்ந்து, தொடர்பின்றி யாண்டுங் கனிந்து சுரக்கு
மருளாகி யூற்றெடுத் தொழுகுமுள்ளமுடைய கைகேயி, தன்னிற் றொடர்
பற்ற யார்மாட்டுமே ஆர்வ முடையளாவள்: எனில், தன் காதற்கிழவ
னிடமும், அவனுக்குக் 'கண்ணினும், உண்ணோவியினு'மினிய புதல்வ
னிடமுமா அவளுக்கு, அன்பு குன்றி, வன்கண்மை வளர்வதாகும்?
இராமன் முடிசூடுதலைச் சுட்டிய "வெவ்விடமனைய" மந்தரை தேவியைப்
"பேரிடர் பிணிக்க நண்ணுவ"தாய்ப் பேசியபோது, "தெவ்வடு சிலைக்கை
என் சிறுவர் செவ்வியர்; அவ்வவர் துறைதொறு மறந்திறம்பலர்.

(ஆதலின்) எவ்விடர் எனக்கு வந்தடுப்பது?" என்று கைகேயி உறுமுகின்றாள். தன் னொருமகவைத் தனித்து நினைக்கிலள்; மாற்றார்மக்களென்பதை யறவே மறந்தவள்; அன்பால் நால்வருந் தன் திருமக்களாத் தழுவியுவக்கு மிவள் மனப்பெருமை யிதனாற்கூறியமையாமற் கம்ப ரின்னுங் கூறுவ தறிவாம்.

"பாராவரும் புதல்வரைப் பயக்க, (அப் பெற்றியால்) யாவரும் உராவருந் துயரை விட்டுறுதி காண்பரால்":—என்ப துண்மையாமேல், "விரா வரும் புவிக்கெலாம் வேதமேயென இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ? என்று" கைகேயி முழங்குகின்றாள். "துறைதொறும் அறந்திறம்பா என் சிறுவர் (நால்வருஞ்) செவ்வியர்," எனச் சொல்லிக் கூனியின் உற்பாதமொழி கடிந்ததோ டமையாமல், பின்னும், 'அறமனைத்துக்கு மச்சாணிபோல்வான், இராமன் நால்வரினுஞ் சிறப்புடையான்; அவனைப் பெற்ற எனக் கேது குறை?,'என் றிருமாந்துபேசி மகிழ்வாள். இதனா லிவட் கிராமன்பாலுள்ள இணையற்ற பேரன்பு விசதமாகின்றது. ஈன்ற பரதனினுஞ் சான்றோனாகவும், தானே பெற்றுடைய பெருமகனாகவுமே யிராமனைப் பரிந்து பாராட்டுகின்ற கைகேயி, அம்மகன் "கோமுடிசூடுவன் நாளை," எனக் கூனிவாயிற் கேட்டதும், எல்லையற்ற வின்பமெய்துவ தியல்பாகும். இம்மகிழ்ச்சியினியல்புகூறியமைவதிராமனிடத் திவ ளன்பின்பெருக்குணர்த்தப் போதாதெனக் கண்ட கம்பர் இவள் கற்புங் காதலுங் கழிசிறந்ததென்பதை வெளிப்படுத்த விரும்பிச் சொல்லிய கவிநய மீண்டுக் கருதத்தக்கது.

"மாற்றமஃ துரைசெய மங்கை யுள்ளமும்,
ஆற்றல்சால் கோசலை யறிவு மொத்ததால்:
வேற்றுமை யுற்றிலள், வீரன் தாதை புக்
கேற்றவ ளிருதயத் திருக்க வேகொலாம்,"

என்ப தீண்டைக் கவிக்கூற்று. எனவே, இதன்பொருள் கம்பருக்குகந்தகருத்தாதல் பெறுவாம். கம்பர்மனக்கடற் பிறந்தொளிருங் கவிமுத்துப் பொதியிற் காழ்த்து நீர்சிறந்த தலைவரிசையான சிலவற்றுளொன்று மிக் கவியழகைக் கவனிப்போம். ஆதிநிந்தைச்சொற்களா லிராமனைத் தூறி, 'அவன் நாளை முடிசூடப்போகின்றான்,' என்று கூனி சொல்லவந்தாள். பாறையிற் சிதறுறுந் திவலையெனக் கூனி பழிமொழி

புகாத செவியால் இராமன் முடிசூடுநலங் குறிக்குஞ் செய்தியை ஆர்வமொடுமெடுத்து உளம் பூரிக்கும் கைகேயியின் நிறைமனநிலைக் கேற்ற உவமை பிறிது காணுக் கம்பர், அப்பெருமகனடையப் போகுந் திருவினை அவனை யீன்ற கோசலை யுணர்ந் தெய்திய அறிவின்பத்தை ஒரு புடையுவமையாகக் காட்ட விடையேற்பாராவர். கைகேயி யனுபவித்த இன்பத் தியல்பு ஒன்று, அளவு ஒன்று; இவையிரண்டையு முணர்த்தவல்ல அமைவுடைய தோருவமை யில்லை யெனத் தெளிந்த கம்பர், ஒப்புயர்வற்ற அவளின்ப வியல்பை உவமியாது விட்டு, அளவுக்குமட்டும் ஏகதேச ஒப்பாக, இராமனபிஷேகத்தில் கோசலையறிவாற் றுய்த்த இன்பத் தெல்லையைக் காட்டுவதானுர்.

பொதுவாக, உணர்வுக் கிடம் உள்ளமும், ஓர்ப்பு சிந்தனைகளுக் கிடம் அறிவுமாம் என்பது யாவரு மறிவதேயாம். இன்பம் உணர்ச்சி வகையாகலான், அதை யனுபவிக்குமிடம் உள்ளமேயாகும். அன்பு இன்ப நுகர்ச்சிகளை நெஞ்சாலும், அரிய ஆராய்ச்சி ஆழ்ந்த சூழ்ச்சி நலங்களை யறிவாலும், அனுபவிப்ப தியல்பாகவே, ஈண் டிராமன்பெரு வாழ்வுகேட்டதில் உளத்தின்பம் கைகேயிக்குமட்டுமே நிறைந்து வழிய, கோசலை தன்னறிவளவில் மகிழ்ந்ததாகக் குறிப்பாலுணர்த்தி, அவளறிவின்பமுங் கைகேயி உளத்தின்பமும் இயல்பா லொவ்வாவேனும், அளவுமட்டி லொருவாறு ஒத்ததென்ருர் கம்பர். "தன் மகனலங்கேட்டு ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தாயின்பத்துக்கு, அம்மகனலம் பேணும் பிறிதெவரின்பமும் இணையாவதில்லை: அப்படியிருக்க, மகன் வாழ்வில், பெற்றவள் உற்ற அளவே, மாற்றன்னையும் பெரிதுவப்பள், என்பதே இயற்கையாகாது. அதற்குமேல், அளவா லொருபடி ஒத்தாலும், பெட்புநலப் பேரியல்பில், கோசலை யறிவாலனுபவித்ததினு மியல் சிறந்த வின்பம் கைகேயி உள்ளத்தா லனுபவித்தாளெனவுஞ் சுட்டிவைத்தது, முழுதும் அசம்பாவிதமன்ருே?" என் றெவருங் கேட்ப தியல்பாகும். இவ்வியல் வினுவுக்குத் தக்க நியாயத்துடன் விடையிறுக்குங் கடனறிந்த கம்பர், மேற்கவியின் முதலிரண்டடியில் "இராமன் முடிசூடு 'மாற்றம்' கேட்டதும், கோசலை அறிவாலனுபவித்த இன்பத்தளவே கைகேயி உளத்தாற் களித்துத் திளைத்தாள்" என்று கூறி, அதற்குப் பின்னிரண்டடியாற் போதிய நியாயமுங் கூறிப்போந்தார்.

'இராமனைப் பயந்த'வள் கைகேயியாமேல், இராமன் பெருவாழ் வடைவதில் அவளே உளமுவப்ப தியல்பாமன்றே. தான் வயிறுளைந் தீன்ற பரதனைப்போலவே, இராமனையும் தானே பயந்தமகனுக்கொள்ளு முளமாண்புடையவள் கைகேயி என்பதை, முன் "இராமனைப்பயந்தளற் கிடருண்டோ?", என் றவ ளிறுமாந் துவந்த விம்மிதங்கூறுமுகத்தாற் கம்பர் நிறுவியுள்ளார். பரதனுக்கு மிராமனுக்கும் அன்னை அன்பில் இவள் 'வேற்றுமை யுற்றிலள்', இருவரு மொருங்கே தன்"சிறுவ"ராகவே கருது மனக்கோளுடைய ளாகலின். பரதனுக்குப் பட்டம்வருவதி லிவ ளெய்து முவகை, ஈன்றதாயின் இயலுளத்தின்பமாவதுபோலவே, தான் பயந்த மைந்தனுக் கருது மிராமனலத்திலும் இவள் உள்ள மள்ளு மின்பவெள்ளத்திற் றிளைப்பதாயினள். பெறுத இராமனைத் தான்பெற்றவ ளாகவே கருதுவதற்கும், பெற்ற தநயனுக்கும், தான் பெறு மகனுக்குங் கைகேயி வேற்றுமைகாணாமைக்கும், காரண மென்னையெனின், அவ ளன்பு தன் தொடர்புடையதில்லாமையேயாம். சாதாரணமாய் மனித ரன்பு தன்னிற் பிறந்து, தன் தொடர்புடையார்பாற் படர்வ தியல்பு. கைகேயியன்பு மவ்வகைத்தாயின், அவள் தன்தொடர் பதிகமுடைய பரதனை, அத் தொடர்புகுறைந்த இராமனினு மதிகங் காதலிப்பதே முறையாகவேண்டும். இவ்வாறன்றி அவள் இவ்விருவர்மேற் செலுத்துங் காதல், அவள் தொடர்பு பற்றாது, பிறிதொருசார்புடைத்தாமேல், அச் சார்பின் பொதுமையா லவளன் பிவ்விருவரிடையுஞ் சமநிலையடைதல் கூடும்.

தமிழ்வழக்கில், 'தெய்வம் தொழாது, கொழுநற்றொழுதெழுதலே' கற்பிலக்கணம் "கணவனிருக்கப் பிறிது'கடவுட் பேணல் கடனு'க் கருதுங் 'காரிகையார், 'பிறர் நெஞ்சு சுடூஉம் பெற்றி'ய தாய தலைநின்ற 'நிறை யுடைப் பெண்டிர்' ஆகார்" :—என்பதே 'பொய்யில்பொருளுரை' யாகக்கொள்வர், பண்டைத் தமிழ்வாணர். இக் கொள்கைக்குச் சிறி தேனும் வழுவும் வான்மீகவாலாறுகளை ஆங்காங்கே திருத்தித் தமிழ்த் துறைபி னிறைகுறையா துநிறுத்துங் குறிப்புடையராய், வாலிக்குப்பின் தாரைவாழ்க்கையை மாற்றிச் செப்பனிட்டமைத்த கம்பர், ஈண்டுக் கைகேயி கற்பழகுகாட்டத்தரும் இக்கவிக்கருக் தூன்றிச் சிந்திக்கத் தக்கது. பின் பரதனுக்குப் பட்டமெனக் கேட்ட கோசலை மனநிலை கூறுங் கம்பர், அவள் 'நால்வர்க்கும், மறுவிலன்பினில் வேற்றுமை

மாற்றினாள்,' என்பார்; ஈண்டு இராமன் முடிசூடுமெனு 'மாற்றங்'கேட்ட கைகேயி தன்தநயனினிராமன்பால் 'வேற்றுமை யுற்றிலள்'; அதனா லவன்வாழ்வில் உளமுவந்தாள்; என்று கூறிவைத்தார். ஆற்றல் சால் கோசலை' யறிவால் மக்கள்பா லன்பில் வேற்றுமை மாற்றி மாண்படைவாள்; கைகேயி வேற்றுமை யறவே யுற்றிலாமையாற் 'றெய்வக்கற்பின' ளாவள்; என்று கம்பர் விதந்து கூறியுள்ளார்.

மக்கள் நால்வர்க்கும், தன் பெண்ணியல்பிற் பிறந்து மாசுபடுத்தும் 'அன்புவேற்றுமையை,' அறிவால் அறமோர்ந்து மாசிலாவாறு மாற்றவல்ல 'ஆற்றல்சால் கோசலை'போலாது, கைகேயி யுள்ளத்தன்பில் வேற்றுமையுணர்வே யுற்றிலாதாள். ஏனெனில், மக்கள்மேற் காதல் கைகேயிக்கு, தன் தொடர்பாலன்றி, தன் காதற்கிழவனாய தசரதன் காரணமாய்ப் பிறக்குமாதலின், அன்பிற்கிடனாய உள்ளமுழுதையு முன்னரே கைகேயி தன் காதலனுக்கு அர்ப்பணம்பண்ணிவிட்டவளாகையால், அவன்வழித்தன்றிப் பிறிதெத்தொடர்புபற்றி யெழுமன்புக்கு மவள்நெஞ் சிடமில்லையாகும். பிள்ளையாசையால் அணையாடையை மோந்து மகிழ்வது, முதுமொழிகொண்ட உண்மையன்றோ? உள்ள முழுதையுந் தலைவனொருவனுக்கே தந்துவக்கும் தேவிநெஞ்சில் அவன் தொடர்புபற்றிவருவார்க்கன்றிப் பிறிதெவர்க்கும் நுழைபுலனில்லை. தலைவன்விருப்பாலன்றித் தன்னையே பேணாப் பெற்றிய ளுள்ளத்தில், தன்சே யென்றொரு தொடர்பெழாது. பரதனைக் கைகேயி காதலிப்ப துண்மை. அதன்காரணம், தன்னைப்பற்றிய தொடர்புடைமையன்று: தசரதனுக்குத் தநயனாதல்பற்றியேயாம். அனையதொடர்பேகொண்டு, அத்தசரதன்மகனேயான இராமன்பாலு மவ ளன்பால் வேற்றுமையுறுமா றில்லையன்றோ? பரதனிடத் தன்பு தன்மகனென்பதாலாயின், இராம னிடத்து அவளன்பு குறைவது முறையாம். அன்றி யவளன்புக்குத் தசரதனே தனிமுதற் காரணமாகில், இருவரும் அத்தசரதன்மக்களே யாதலின், அவரிடை யன்பில் அவள் வேற்றுமையுறினன்றோ வியப்பாக வேண்டும்: உறாமையியல்பேயாமன்றோ?

இவள் கற்பின்வழித்தாய காதற்செவ்வியை யினிதுகாட்டவந்த கம்பர், கைகேயி, இராமனிடத்தே தான் பெறுமகனாக வேற்றுமையுறா மைக்குக் காரணங் கூறுமுகத்தாற் சொல்லுவதிதுவே:—

"வேற்றுமை யுற்றிலள் வீரன் தாதை புக்கு,
ஏற்றவள் இருதயத் திருக்கவே கொலாம்."

வீரனுப இராமன் தாதை, முன் அவளிதயத்தில் விரும்பிப் புகுந்தார். அவளும் விரும்பி ஏற்றாள். இவ்வா றிருவரும் பரஸ்பரவிருப்பமுடைய வராய், மனங்கலந்தாலும், பின் ஒரோவழிக் காதல்குறைபவரைப்போலாது, தசரதன் கைகேயி உள்ளத்துள் உவந்திருந்து இகவாதுநிலைத்தான்: அவளும் நெகிழவிடா திருகப்பற்றி யிருத்தி மகிழ்வாள் இவ்வா றவளுளமுழுதுங் கணவனுடைமையேயாகியதால், அவன்சார்பாக அவள் நெஞ்சிடம் பெறுவார்க்கன்றிப் பிறர் புகுமாறில்லை. இராமனும் பரதனும் தசரதன் காதற்றநபராகவே, இருவரு மவள்உள்ளத்தே ஒரேபடித் தாய் ஒத்திடம் பெறுவதானார். அதனா லவர்பா லன்பிற் கைகேயி வேற்றுமை யுற்றிலள்:—என் றேதமறவாத முறைவகுத் திவள் கற்புடைக் காதலின் பெட்பும் திட்பமும் விளக்கினர் கம்பர். இத்தகைய மாசற்றகாத லிராமனிடத்தும், இடம் பிறிதெவர்க்குமிலா துளமுழுதுங் காதற்கிழவனாய கணவனிடத்துந் தங்குவைத்த பெற்றியளாய பீடுடைப் பெருநிறையும் பொருளுமே பேணுங் கைகேயி, இராமனுடைமை பறித்துப் பரதனுக்குப் புதுவாழ்வளிக்க விரும்புவளென்பது பொருந்துவதெங்ஙனம்?

மேலும், தன் சூழ்ச்சிக் கிணங்கொணுத் தேவியைத் தன்கருத்துக் கிணக்கவேண்டி, அரசி மனமுங் குணமும் நன்கறிந்த மந்தரை படிப்படியே அவளுக்குச் சொல்லிப்போந்த நியாயங்களினியல்பு முறையுஞ் சிந்திப்பார்க்குக், கற்பரசி கைகேயியின் அறங்காழ்த்த மனத்திட்பமும், அருணிறைந்த நெஞ்சத்தழகும் விசதமாகும். இராமன்பாற் பகையாற் புகையும் வெகுளிகவர்ந்த மனக்கூனி, சிந்தியாமல் முதலில், மனை மாற்றார் வீறுகூறச் சீறும் பெண்ணியல்புகருதித் தான் பேசிய தாசி செவியேறாதது கண்டு, பின் அவள் சுபாவங்களை நினைந்து, முறையே பெண்டிர் தன்னலவிருப்பையும், மாற்றார்பால் வெறுப்பையும், சுதன்பாலன்பையும், சுற்றத்தார்மீ தன்பையு மளாங் தவ்வவற்றிற் கேற்பன சொல்லி யவையும் பயனில்வாகவே, "ஒல்லும் வாயெல்லா மோவா தறவினை செல்லும் வாயெல்லாஞ் செய"க் காமுறும் கைகயி அறத்தாசை யைச் சுட்டி, அதற்கிராமன் முடிசூட விடையூறாமெனக் கூறினள்;

அப்பருப்பும் வேகாது போகவே,, மேற்கவியின்படி பரதன் அரசெய்தத் தேவியை ஒருப் படுத்துகின்றாள். எனவே, முன்கூனி சொல்லிழந்த பலவற்றினு மதிக மவள்மனதிற் பதிவதும், அவையிற்றின் வேறனது மாவதோர் புது நியாய மிக்கவியாற் சுட்டப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், பொதுவாய் ஒருவரை யிணக்கவிரும்பிப்பேசுங்கால், சொன்ன தொன் றவர் மனங்கொளாவிடில், அதி லதிகம்பதிவுபெறு முறுதிக ளெடுத்துரைப்பதே முறையோடு பயன்பயப்பதன்றி, முன்னதினும் நயங்குறைந்த நியாயம்பேசல் பயனில்கூற்றுமன்றோ? தன்னலங்கருதா அறவியலுடைய கைகேயிக்கு, அவள் குணமறிந்த கூனி முறையே மேன்மேல் அறத்துறையதிகரிக்கு நியாயங்களை யொன்றிழந் தொன்றாய்ச் சொல்லியும் அவையெலா மேற்காதவளை, இறுதியி லேற்றிணங்கச் செய்தது அறத்தாறழுங்காத நெறிமுறைநியாயமா யிருத்தல்வேண்டு மென்ப தொருதலையன்றோ? முதலிற் றான் கேட்க மறுத்து வெறுத்த கேவலம் தன் மகனலம் ஒன்றையேகருதி இறுதியிற் றன் சிந்தையின் தூய்மையைக் கைகேயி துறந்தனளாகக் கொள்ளுதல், வேறு வழியற்றவிடத்தன்றி முறையாமா? அவ ளறச்சிந்தைக்கும் அருங்கற்புக்கும் பொருந்துவதானபொருள் வே றிக்கவி வருத்தமின்றித் தருமாயின், அதைக்கொண்டு பொருந்தாப் புன்பொருள் போகவிடல் கடனும்: முறையும் அஃதேயாமன்றோ?

இன்னு மிப்பொரு ளிச் செய்யுணடை, தொடரமைப்பு, சொல் லிணக்கம், மொழியியல்புகளுக்கும் பொருந்தாமைகாண்பாம். 'ஒரு மகற் கெனவேகொடுத்த பேரரசு,' என்றதொடரை எடுப்போம். இராமனுக்கு மறுநாள் இளவரசபிஷேகத் திருநாளாய்த் தசரதமன்னன் சங்கல்பித் திருக்க, அதைச்சுட்டுங் கூனி பொருட்கமையக், 'கொடுக்கும்' என்னுது, 'கொடுத்த' எனப் பொருந்தா விறந்தகாலச்சொற் பிரயோகிக்க விட மில்லை. 'கோமுடிசூடுவனை,' என முன்னுங் கவனித்துப் பேசியவள், ஈண் டிலக்கணத்தோ டியல்வழக்குங் கடி சொற் பெயு மடியாகக் காரண மில்லை. இங் கிதனைக் காலவழு வமைதியாக் கொள்வா மெனின், சொல்லின் செம்பொரு ளமையாது வழுக்காணுமிடத்தன்றேவழுநீக்க வழுவமைதி யிலக்கணத்தில் வழிதேடவேண்டும்? நேர்பொருளே ஏற் புடைத்தாமிடத்துக், கவியி னியலழகைப் பழுதாக்கி, வழுவமைத் தழுதலைவதேன்? இனி இளவரசபிஷேகமே மன்னவன் செய்விக்க

முயன்றதாக வான்மீகத்தில் வலியுறுத்தப்பட்டிருக்க, “தேவபாடையி னிக்கதை செய்தவர், மூவர் தம்முளு முந்திய நாவினார்உரை”யறிந் ததன்படியே “தமிழ்ப் பாவினாலுணர்த்த” வந்த கம்பர் ஈண்டு இராமனுக்குத்தரப் போவதைக்குறிப்பரேல், தகவு மறந்து “பேரர செ”ன்றதனைச் சுட்டியிரானன்றே! அன்றியும், கூனி இராமன்பால் வெறுப்புமவமதிப்பு முடையவள். இராமனையும், சீதை கோசலையை யும் மதியாமற் பேசும் வழக்கமுடையவள்: தன் தலைவியை “அரசரிற் பிறந்து, அரசரில் வளர்ந்து, அரசரிற்புகுந்து, பேரரசி” யானவ ளென்றும், அதற்கு மாறாகக் கோசலை அத்தகைய குலநலப்பெருமை குன்றியவளெனவுங் கருதுபவள்.

“ஆடவர் நகையுற, ஆண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை யிராமன்..............,” என்றும்,

“சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்
நிவந்த வாசனத்தினிதிருப்ப,” என்றும்,

துதி நிந்தைச்சொற்களா லிராமனைச் சுட்டுஞ் சுபாவமுடைய மந்தரை, மனமார அவனை ‘ஒருமகன்’ எனவும், அவனெய்தப்போகும் இளவரசைப் “பேரரசு” என்றும், அவன் மக்களைக் “கோமைந்த” ரெனவுங் கூறுவளா? ஈண்டிக் கவிமுழுதுங் கூனிவாய்க் கூற்றாகவே, அவள் குணத்தோடமைந்த சொற்பிரயோகமன்றோ கம்பரிட மெதிர்பார்க்க வேண்டும். தனை யெதிர்த்த மானவரிட மிராவணனுக்குள்ள அலக்ஷிய புத்திக் கேற்ப, அவ னவரைக் குறிக்குந்தோறும் ‘மனிதர்’ என்னாது ‘மனிசர்’ என் றவன் வாயிற்சொற் பெய்புங் கம்பர், மறந்தும் தகவு தவிரார். ஆதலால், கூனிவாயி லிச்சொற்க ளிராமனைக் குறித்தெழா என்பதைக் கம்பர் மறந்து இக்கவி செயக் காரணமில்லை. மேலும், இராமனெய்து மரசினுக்கும், அவன் குலமைந்தர்க் கவன் வழித்தாவ தியல்பாகலாம்; மக்களில்வழி, இளையரில் மூத்த பரதனுக்குதவாமல், இலக்குவனுக்குமட் டாவ தெப்படி? கவியிற் கூனி பேரரசு—“மைந்தர் தமக்கும்,” ‘அடுத்த தம்பிக்கு மாம்’ என்று விதந்து கூறுவதால், இரா மனை யடுத்திருக்கு மிலக்குவனை யீண்டவள் குறிப்பதா யெண்ணில், பரதனுள்ளிட்ட பிறரனைவர்க்கும் அரசுரிமையாக்க மில்லை யென்பாளா

கும். வழிமுறைவரிசையில் அரசுரிமையைக் குறியாது, இராமனரசியவில் இலக்குவனெய்தும் இராஜபோகானுபவங்களையே குறிப்பதாக் கொண்டு, அவ்வாக்கம் பரதன்முதலிய பிறருக்கு இல்லை என்றதாக் கொள்வோமெனில், அதுவு மமைவுடைத்தன்றாம்: ஏனெனில், அப்போ தனுபவித்தற்கிடமின்றிப் பின்பிறக்கவிருக்கும் இராமன் "கோமைந்தர்" தமையுமிங்குச் சுட்டி, அவர்க்கும் அப் "பேரரசு" ஆம் என்பதாலும், அம்மைந்தர் இலக்குவனைப்போலக் கேவலம் போகானுபவங்களைமட்டுமன்றி அரசுரிமையையுமே அடைபவராதலானும், ஈண்டுப் பேரரசு இராமனும் அவனுக்குப்பின் னடையு முரிமையுடையாருமெய்தும் அரசுடைமையையே நுதலியதாகவேண்டும். இனிப் பரதனையே 'அடுத்த தம்பி' எனக் கூனியிங்குச் சுட்டுவதாக் கொள்ளற்கு மிடமில்லை. ஏனெனில், முன் பலமுறையும், இராமனரசெய்தில், இதனாற்கோசலையு மிலக்குவனுமே வீறு பெறுவ ரென்றும், பரத னவந்தனாய் வறுமையு மானக் குறைவு மெய்துவன் என்றும் வலியுறுத்துங் கூனி, இங்கு இராம னடையு மாக்கம் பரதனுக்கும் பின்னுமெனப் பேசாள். அப்படிப் பேசுவதாகக்கொள்ளுவது, முன் கொண்ட பொருளொடு முரணுவதோடு, ஈண் டவள் வலியுறுத்தவந்த கருத்துக்கும் பொருந்தாதாகும். இராமன் வாழ்வு பரதன் தாழ்வேயா மெனக் காட்டிக், கைகேயியை யிணக்கப் பேசுமிடையே, இராமனிறைமையாற் பரதனுங் குறைவின்றி நன்மை பெறுவதுண்டாகக் கூனி சொல்லுவ தமைவுடைத்தன்றாம். எனத் தானு மிச் செய்யுள் வாக்கியம் நா முதலிற் கொண்ட பொருளொடு சிறந்து பொருந்தாமை தெளிவாகின்றது.

இதுவேயுமன்றி, இராமன் ஜ்யேஷ்டனிலையி லுரியதன்னரசைத் தானெய்துவ தியல்பென நாங் கருதுகின்றோம். உரிமையற்ற பரதன் தசரதன் கொடுத்தாலன்றி யரசு பெறுமாறில்லை. இராமனுக்கோ அரசு பிறப்புரிமையாகும். கவியில் 'ஒருமகன்' என்ப திராமனைக்குறிக்குமாயின், "உடையவன் வருமகற்கெனவே கொடுத்த பேரரசு" என்று விசேடித்திருப்பதற்கு நியாயமில்லை. பிறப்புரிமையற்றவர் அரசுபெறுவதற்குத் தான், கொடையும் கொடுப்பாற் குடைமையும் இன்றியமையாதனவா. மூத்தவனான இராமன் வரன்முறையிற் பிறப்புரிமையுடையனாகவே, ஈண்டுக் கூனி அவனுக் கிளவரசபிஷேகம்பண்ணுவதைச் சுட்டுவதாக் கொள்ளுங்கால், தசரதனை 'உடையவனா'கவும், அவன்

கொடையா விராமன் 'பேராசு' பெறுவதாயுஞ் சிறப்பித்தல் பொருளும் பயனு மின்றாம். இன்னும், இராமன் தன் உரிமையை உள்ளபடி தானெய்தப்போவதிலும், உரிமையற்ற பரதனுக்கு வரவேண்டாததை அவனடையாமையிலும், பரதன் கெடுமாறில்லையன்றே! இப்படியிருக்க, "கெடுத்தொழிந்தனை யுனக்கரும் புதல்வனை," என்று கடுமொழிகூறிக் கூனி பழிப்பதற்குப் பொருளுண்டோ? புதையல் பெற்றான்போலத் தனக்குரித்தில்லா ஒன்றை ஒருவ னடையின், அதனால் அவனுக் கிலாபமுண்டாகலாம். உரியதொன்றைக் கையறவாலோ, கவனக் குறைவாலோ, யிழக்கநேரி னதனா லவன் கேடெய்தலாம். கிடைக்க வேண்டாதது கிட்டாததாற் புத்தூதியம்பெறுவதற் கில்லையாமேயன்றிக் கேடுறுவ தெப்படியாகும்? கிரமமற்ற பேராசை வஞ்சவலியால் வாங்கித் தரவிசையாமைக்காகப் பரதன் "நற்றாய் தீயளா"வதெப்படி? வான் முறையி னிராமனுக்குரியதை யவனுக்களிப்பதால், "தந்தையுங் கொடியனா"வதுண்டோ? இதனாற் றசரதன் "அந்தரம்தீர்ந் துலகளிக்கு நீர்" மையனாவதுதா னெப்படி? "கோசலை மதியினால் வாழ்ந்தனள்"ஆவ தென்ன? அவள் மகன் தன்னுரிமையைத் தானடைவதில் அவளுக்குச் சிந்தனை விரிவானேன்? பாட்டனைப்பார்க்கக் கேகயத்துக்குப் பரதனை... அரசன் ஆணையால்...சேணிடைப்போக்கிய"தில், கூனி இன்று கண்ட புதுப்பொருள்தானென்ன? மந்தரைவாயிற் கம்ப ரித்தனையும் பொரு ளின்றி வீணே புகுத்திவைப்பாரா? இனைய பலவற்றானும் நா மறியக் கிடப்பது, இக்கவியிற் கூனிகூற்றிற்கு இத்துணை முரணுடைப்பொருள் கொள்வது பொருந்தாது: வேறு தகவு மிகவுடையதோர் செம்பொருள் காண்ப தறிவா மென்பதேயாம். அத்தகைய பொருந்தும் பொருள் வேறுளதாவென விசாரிக்கப்புகுவாம்.

இது சம்பந்தமா யூன்றி நாஞ் சிந்திக்கவேண்டியகவிகளி னின்னு மிரண்டொன்று கிளைகண்டு நீங்குபடலத்தி லுண்டு. கூனிகூற்றாய மேற்கவியோ டியைபும், அதன்பொருளாராய்ச்சிக்குத் துணையுமா மச் செய்யுள்களையுஞ் சிறி திங்குக் கவனிப்போம். 'பசைந்த சிந்தைப் பரதன்' இராமனை மீண்டழைத்து வந்து அரசனாக்கும் நோக்கத்தால் வனம்போந்தனன். அவன்வாய்த் தன்தந்தையார்மரண மறிந்து இராமன் வருந்தித் தேறியபின், அவர்க் கீமக்கடன் முறைப்பாற்றினான். மற்றையனா ளிராமன், வற்கலையுடுத்தி, மெய்ம்மாசுடன், நகையிழந்த

முகத்திற் கற்கனியக் கனிகின்ற துயர்ததும்ப, 'அவல மீ'தென எழுதிய 'படிவமொத்த' விரதவேடப் பரதனைப் பார்த்து, "வரதன் (தசரதன்) துஞ்சினன்; வையம் அவன் ஆணையால் சரத நின்னதே: மகுடஞ் தாங்கலாய், என் கோல்? கூறெனப் பரிந்து கூறினன்." இது கேட்டதும், 'பதைத்தெழுந்து, தொழுது நின்று,' இராமனை நெடிதுநோக்கி, "வான் முறையு மறனும் பிறழ்ந்து வசைகொள்வனோ? முதற் பிறப்பாளுனக்குரியதரசு; தந்தைபால் என்தாய் வரங்கொண்டு தரணி வெளவித் தரினதைவாங்கத்தரியேன். மீண்டுவந் துன்னரசை நீ யாண்டு வசை நீக்கிக் காத்தல் (நின்) கடன்," என்று காவில் சிந்தையன் கதறலாகினன். ஈண்டுக் கம்பர் பரதன்வாய்ப் பெய்துவைத்த சொற்கள் கவனிக்கற் பாற்று.

பிறந்து நீயுடைப் பிரிவில் தோல்பதம்...... நீதியிற்றிறம்பி, வாளினுற்கொன்று அறந்தின்றுலென, அரசதாள்வனோ? எந்தை ...மீண்டரசு செய்கென (தன்)சிந்தையாவதுந் தெரியக்கூறினன்" என்பது கவிவாக்கு. தசரதன் ஆணையால், சரதம், அயோத்திநாடு பரதனது, என் றிராமன் முதற்கூறியதை யொவ்வாத தம்பி, தமையன்பிறப்பின் சிறப்புரிமையை வற்புறுத்திக்காட்டி, "மீண்டரசுசெய்து," தன்னைப் பழியாழிக் கரை யேற்றியுதவும்படி குறையிரக்கின்றான். அதன்மேல், அறத்துறையாற்றி முறையிறவாததம்பியின் தூய்மனத்துணிவும், தந்தைமரணத்தாலும் தமையன்பிரிவாலும் இருமுதுதுரவரால்வந்த வசையாலுமிற்ற அவன் மனப்பான்மையும் நன்கறிந்த இராமன், பரதன்பாற் பழியின்மையும், அவனுக்கு அரசுரிமை யறத்தாறுண்மையு மெடுத்துக்காட்டி யவனைத் தெருட்டுமாறு பின்னுஞ் செப்புவான்:—

"'வானி லுந்தைசொல் மரபினு லுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்,
ஊனில் நீபிறந் துரிமை யாதலால்,
அரசு நின்னதே, ஆள்க; என்னவே."

இராம னிதுசொல்லவும் பரதன் பருவரல் நீங்கித் 'தன்னெண்ண மீடேறியது; இராம னினித் தனக் கிணங்கா தரசை மறுக்குமாறில்லை'யெனக் கண்டுவகைகொண்டு தாழாதுடனே, "பார் என்னதாகில், யானின்று தந்தனன்; மன்ன! போந்து நீ மகுடஞ் சூடென" விரைந்துபணித்து

இராமனை யற்புத்தளையாற் பிணிக்கின்றான். அதினின்று நெகிழ்ந்து நழுவ வழிகாணு திராமன்,

"எந்தை யேவ, ஆண்டு எழொடேழெனு
வந்த காலம்நான் வனத்துள் வைக,நீ
தந்த பாரகந் தன்னை மெய்ம்மையால்
அந்த நாளெலா மாள், என்ஆணையால்."

என்று கூறி, அதனையே வானவரும் அசரீரியா வற்புறுத்தல்காட்டி, இனி நீ மறுக்கற்பாலதன்று: யான் உனை யிரந்தனன்: (வரதன் ஆணை யாலன்றி) இனி என் ஆணையால், ஆனதோர் அமைதியின் அளித்தி பார்,' எனுத் தான் தன்துணைவன் துணைமலர்த் தடக்கைபற்றி" வேண்டலாயினன். தன் பெருவிருப்பிற் கிணங்கி இவ்வாறு தகவுரைத்த தமையன்சொற் கிசைந்து 'பசைந்த சிந்தையான், "ஆம் (அப்படியாகட் டும்) எனில், எழிரண்டாண்டில், ஐய,நீ...நகர் நண்ணி, நானிலங் கோமுறை புரிகிலையென்னில், (நான்) கூர் எரி (புகுந்து) சாம்; இது சாதம்: நின்னுணை" ...."என்பது சொல்லி,"ப்பின், (இதுவரை) "துன் பம் ஒரு முடிவி"லா தான் "யாதுமோர் துன்பிலனுய்," இராமனின் முடி வுரையை எதிர்பார்த்து நோக்கினன். "அன்பின னி'ராமன் 'உருகின னுய்,' அன்ன தாகே"னப் பரதனுக்குப் பதிலளித்தான். சம்மதித்த பரதன் இராமன்பாதுகையை யிரந்துபெற்று மீண்டான்.

ஈண் டிச்சோதரர் சம்வாதத்திற் றெளிபக் கிடப்பன சில குறிப் பாம். வரமிரந்த கைகேயிக்கு வாக்குத் தந்த தசரதன் "ஆணையா"ல் (அயோத்தி) அரசுக்குரிய 'வையம் நின்னதே சாதம்' என் றிராம னுரம் பத்திற் கூறவ் மதனைத் தகவிலதாய்த் தவிர்த்து மறுத்து, முதல்வ னுப்ப் பிறந்ததனுல் தமையனுக்குடைமையாம் அரசு தனதாமாறில்லை யென விலக்கிய பரதனே, பின்னிறுதியி லிராமன் "உந்தைசொல் மரபி னுல் தரணி நின்னது. ஊரனில் நீ பிறந்துரிமை யாதலால் அரசு நின் னதே. ஆள்க," என்று கூறக்கேட்டதும், நாடு தனதாகக்கொண்டு, மீண்டதனைத் தமையனுக்குத் தானே தருவதாய்ச் சொல்லலுற்றான், "மூத்தவனுப்ப் பிறந்த தன்மையால், நீயுடைத் தொல்லரசை நீயே மீண்டு பெற்றுளுக," என்று மன்றாடிய பரதன்சொல்லை நிராகரித்த இராமனே, "பார் என்னதாகில், யானின்று தந்தனென். 'போந்துநீ மகுடஞ்சூடு," எனப் பரதன் சொன்னது மிசைந் தாசையேற்றுத், தான் பதினலாண்டு வனமிருந்து; திரும்பிவரும்வரை 'தன் ஆணையால்'

நாட்டைப் பரதன் பரிபாலித்துவரும்படி பணிக்கலாயினன். கைகேயி வாமிரக்கத் தசரதன் தந்த ஆணையால் அயோத்திபாசு தனதாக் கொள்ளவிசையாத பரதன், 'என் ஆணையால் ஆள்க' என் றிராமனேவவு மிசைகின்றான். இவ்வா றிராமனும் பரதனும் ஒருவருக்கொருவர் முறையே முதலிற்கூறிய விவகாரங்க ளேற்கொணுதனவாய் மறுத்து விலக்கியவர்கள், இறுதிபி லெடுத்துரைத்த நியாயத்தாலிணங்கி யிசைவ தற்கு, இவர் பின்னையகூற்று முன்னதின் வேறுபட்டதும் வலியுந் தக வும் வாய்ந்ததுமா யிருத்த லின்றியமையாத தென்பது விசதமன்றோ? தசரதன் தன் தாய்க்கு வரமாத் தந்ததால் தான் 'தாணி' பெறுமா றில்லை யென்பதும், இராமன் பின் "உந்தைசொல் மரபினால், உரனில் நீ பிறந்துரிமையாதலால், அரசு நின்னதென்ன"ச் சுட்டிய நியாயத் தால் தந்தை நாடு தனக்காமென்பதும், பரதன் கருத்தாகக்காட்டினர் கம்பர். எனவே, மூதற்பிறந்ததால் இராமனெய்தவேண்டுமரசு தாய்க்கு வரமாத் தந்தைதந்த 'ஆணையால்' தனதாகாதென்று துணிந்துநின்ற பரதன், தான் பிறந்ததாலுரிமையெய்தும்படி தந்தை சொன்னதோரு சொன்மரபுண்மையை இராமன் சொல்லக்கேட்டதும், நாடு தன தாமாறுகண்டு, உடையனான தானே தமையனுக்கு அதைத் தருவதற்கு முன்வரலாயினான். தமையனுக்குத் தான் தருமுன், தனதுடைமை அறத்தாறழுங்கா நல்லுரிமையானலன்றித் 'தருமத்தின்தேவும், செம்மை யின் ஆணியுமான பரதனிராமனுக்குத் தான் அரசு தருவதாகப்பேசத் துணியானென்பதொருதலையன்றோ? மூன் பிறந்ததால், தமைபனதா மரசைத் தாய் வௌவியதாக்கருதி வெறுத்த பரதனதெண்ணம் தவ றென்றும், ...பிறந்ததன்மையாற் பரதனுக்கே அரசுரிமைபமைபத் தசரதன் சொல்லிய பழைய சொன்மரபுண்டென்றும் எடுத்துரைத்து அதுவரை யிணங்காப் பரதன் தூயமனதை யறத்துறைகாட்டி இராம னிணக்கியதாகக் காண்பாம். இதனாற்றசரதன் கைகேயிக்கு கேட்கத்தந்த வரச்சொல் வேறு; பரதனுக்குப் பிறப்பா லரசுரிமையாம்படி சொன்ன மரபுச்சொல் வேறு; என்று தெளிகின்றோம். முன்னதை அறங்கொல் லும் பழிதருவதாய் வெறுத்துமறுத்த 'தருமத்தின்தே'வான பரதனே, பின்னதை நெறிமுறைதிறம்பா அறத்துறைநிற்பதாயங்கீகரிக்கின்றான். அவ்வா றவன்பிறந்ததனு லுரிமையெய்தும்படி தசாதன் சொன்ன மரபுடைச்சொல் யாதாயினுமாகுக; அச்சொல் பரதன் பிறக்குமுன்

சொன்ன சொல்லாதல்வேண்டு மென்பதுமட்டும் வெள்ளிடைமலை யாம். அன்றேல், இராமன் பிறப்பாலுரிமைபெறாது, அறத்துறை யாற் பரதனுக் கரசு பிறப்புரிமையாமாறில்லை: ஏனெனில், இராமன் பிறந் துரிமையெய்தியபின் தந்தை சொன்ன எச்சொல்லாலும் அரசுரிமையை இராமனுக்குவிலக்கித் தான்கொள்வது "நீதியிற்றிறம்பி அறங்கொன்று தின்பதாகு' மென்னுந் துணிவுடைய பரதன், தாதை தன் தாய்க்கு வரமாயளித்த சொற்கேட்டு மதனைக் கடக்கொணாப் பழியாக்கருதி அறவே வெறுக்கின்றான்: பின்னிராமன்வாயி லிம் மரபுடைச்சொல் லுண்மைகேட்டுப் பிறப்பாற்றனக்கரசுரிமையாவதுகண்டு, அறத்துறையி லது தனதாகலாற்றா னேற்கின்றான்: ஏற்ற தன்னுடைமையை அற்புக் கையுறையாகத் தமையனுக்குத் தான் சமர்ப்பிக்கத் துணிகின்றான். ‘“பிறந்து நீயுடைப் பிரிவில் தோல்பதம்”—அயோத்தி அரசு,’ என்ற பரதன் கூற்றை அறமாக்கொள்ளாத இராமனும், முன் தன் தந்தை தந்ததோர் அறம்வழாமரபாக்கச் சொல்லுண்மையும், அதனால் அரசு பரதனுக்கே பிறப்புரிமையாவதும் தம்பிக்குத் தெரிவித்து, அதன் மேல் அறமுறையா லரசுக்குரியனாய பரதன் தன்பால் உழுவலன்பால் உவகையோ டுதவ மறுக்கொணாது தான் அதைப் பெறுவதற் கிசைய லுற்றான். பிறப்பால், இராமனுக்கின்றிப் பரதனுக்கே அறத்தா றரசமை யும் மரபுவழுவாததோர் பண்டைச்சொல்லுண்மை ஈண்டுப் பசுமரத் தாணியாக வலியுறுத்தப்படுகின்றது.

‘தயாமுதலறமான’ இராமன், ‘நியாயமத்தனைக்கு மோர்நிலையமான’ பரதன் புனிதமனமிசைய, இறுதியி லெடுத்துரைத் திணக்கிய மரபு வழா அறமமைந்து பொருள்பொதிந்த தசரதன் சோரொணாச் சொல் லுண்மையைத் தாசரதிவாய்க்கேட்டு, அவன் தெருட்டத் தெளிந்த பரதனுடன் நாமுஞ் சிறிது தெளிவு காண்பாம். ‘வரதன் வரத்தால் அரசு நினதே’ன்ற தமையன்சொல் தகவிலதாக விலக்கி மன முளைந்த பரதன், பின் “தந்தை முன்சொல்மரபினால் அவனுடைத்தரணி நின்னதென் றியைந்த தன்மை”யை இராமன் காட்டக்கண்டு, நாடு தனதாக் கொண்டான். அதுவேபோல், தெய்வக்கற்பினளாய கைகேயி யின் ‘வரன்முறை அறத்திற்’ பதிந்து சலியாது நின்ற தூயசிந்தையும் மந்தரை யிறுதிக் கூற்றும் மேற்கவிக்கருத்துணர்ந்தபிறகே திரிவதா யிற்று. அதனால், அரசு பரதனுக்கே பிறப்புரிமையென்பதையும், இராமனுள்ளிட்டார்பிறர்க் காமாறில்லை யென்பதையும் தெரிவிக்கு மோர் சோன்மரபையே இக்கவியும் சுட்டினதாகவேண்டும். இல்லையாமேல், அவள் தூயசிந்தை இராமனரசைப் பரதனதாக்கும் பழிவழியிற் றிரியு மாறில்லை. இதுவரை கம்பர் கவிகளையேகொண்டு இம்முடிபுகண்ட நாம் இனி இது சம்பந்தமாய் வடமொழியில் வான்மீகர் சொல்லு மிடங்களை யுஞ் சிறிது கவனிக்கப் புகுவாம். [தொடரும்]

எஸ். எஸ். பாரதி.

ஸ்ரீ:

மிழலைச் சதகம்.

[இது, தஞ்சைப் பிரதாபசிங்கன்காலத்தில், சர்க்கரைப்புலவரால் மிழலை வேளாளரைச் சிறப்பித்துப் பாடப்பெற்றது. எனக்கு நண்பர் ஒருவரிடமிருந்து கிடைத்த கிரிதக்கையெழுத்துப்பிரதியிலிருந்தபடி வெளியிடப்படுகிறது. உதவிப்பத்திராதிபர்.]

1. பிதிராதகங்கைகுலஞ்சேர்மிழலைப்பெரும்பதிவாழ்
அதிரூபர்யோகரவர்மேற்சதகமுண்டாக்குதற்கே
கதிதேருமின்பக்குருந்தீசர்பாலெந்தக்காலமுமே
முதிராதசெப்பிளங்கொங்கையோகாம்பிகைமுன்னிற்பளே.

2. மதிவந்துலாவுநல்லாரூர்ப்பெரியமடந்தையினு
ணிதிவந்துலாவும்படிகட்டிவைத்துநிலைதவறூர்
ஆதிவந்துலாவுஞ்செழும்பூந்தாங்கச்சுவேதமெனு
நதிவந்துலர்வியநாட்டார்மிழலைநாதிபரே.

3. தேளினுமெத்தக்கொடியார்சிலரிடஞ்சென்றுமத
வேளினுமீகென்றுரையாமற்செந்தமிழ்வேந்தருக்கே
கோளினும்வெய்யகலிக்கோடையோடக்கொடுத்துவெகு
நாளினும்பேர்பெற்றநாட்டார்மிழலைநாதிபரே.

4. விண்ணுந்திசைகளொருநான்குநான்கும்வியன்புலவோர்
கண்ணுஞ்செவியுங்களிப்போங்கத்தந்தெந்தக்காலமுமே
எண்ணுங்குலவரைமீதேறியண்டத்திலேறியப்பா
ணண்ணும்புகழ்கொண்டநாட்டார்மிழலைநாதிபரே.

5. தூயகமாமந்தமூவரென்பார்க்கிந்தத்தொல்புவிமேல்
? தாயகமானென்பதெவவேந்தருவஙக்கான
சேயகமாமென்றுலகேழும்போற்றத்திசைகட்கெல்லா
நாயகம்போல்வந்தநாட்டார்மிழலைநாதிபரே.

6. ஆதித்தன்றெற்குவடக்காகினுந்தம்மறிவுசற்றும்
பேதிக்குந்தன்மைவருவதுண்டோவிருபேச்சுமுண்டோ
மேதிக்குவிழுலைப்பாலுண்டுசங்கிக்குமீதிருந்து
நாதிக்குநீர்ப்பண்ணைநாட்டார்மிழலைநாதிபரே.

7. அடுக்கப்படிக்கின்றசெந்தமிழ்ப்பாவலராரினையுந்
தடுக்கப்படிக்கின்றகல்விகல்லாரிந்தத்தாரணிமேல்
கொடுக்கப்படிக்கின்றகல்விநன்றாய்வந்துகூடியபின்
நடக்கப்படிக்கின்றநாட்டார்மிழலைநராதிபரே.

8. மருமாலையாண்டமலையாந்தவமுனிமாதவனும்
திருமாலையாண்டங்களிப்போங்குகீர்த்திதிசையும்பெற்று
தருமாலையாண்டகொடையாருலகந்தழைக்கவந்த
கருமாலையாண்டபுகழார்மிழலையங்காவலரே.

9. கொந்தாருங்கண்டியர்கோனுக்குச்செந்நெற்கொடுத்தனுப்பும்
செந்தாமரைக்கண்ணன்பாலொருபிள்ளைசெங்காலனென்றே
ஐந்தாருவென்னப்புவியிலுற்றான்மற்றவன்குலத்தில்
வந்தோர்களாவரிவர்காண்மிழலையில்வாழ்பவரே.

10. பொழுதுண்ட மட்டுஞ் சலியாமலேவல்புரிந்துநின்று
தொழுதுண்டுவாழ்தலதுபுகழோவிந்தத்தொல்புவிமேல்
எழுதுண்டகீர்த்திமிழலையங்காவலரெப்பொழுதும்
உழுதுண்டுவாழ்வதுவேயெவர்கட்குமுத்தமமே.

11. உரைகட்டுங்காவியநூலாகமங்களுயிர்கட்கெல்லா
மிரைகட்டும்பாரகமெல்லாந்தலைகட்டுமிம்மட்டுமோ
நிரைகட்டுஞ்சாலிமிழலையங்காவலர்நீள்வயற்குக்
கரைகட்டும்போதுபதினாலுலகுங்கரங்கட்டுமே.

12. அரமொன்றுவேல்விழியோகாம்பிகைதன்னருள்சிறந்த
வரமொன்றுகீர்த்திமிழலைநன்னாடர்வளமென்சொல்வேன்
திரமொன்றுலகத்தைக்காக்கின்றவேந்தர்க்குத்திண்புவிமேல்
உரமென்றுசொல்வதெல்லாமவர்செய்யுமுரமதுவே.

13. வாளுக்கொப்பாகும்விழியாரிரதிமயல்தருஞ்சீ
ராளுக்கொப்பாகுமிழலைநன்னாடரவனிக்கெல்லாங்
கேளுக்கொப்பாகும்வயலூடுழுகக்கிடைக்குமந்த
நாளுக்கொப்பாகியநாளில்லைகாணைந்துநாளிலுமே.

14. ஆழிநடக்கும்பரிதேர்நடக்குமறுமுகனூர்
கோழிநடக்கும்பசுவேறுவணக்கொடிநடக்கும்
வாழிநடக்குமிழலைநன்னாட்டுவரம்புடையார்
மேழிநடக்கின்நடவாததொன்றில்லைமேதினிக்கே.

15. நீர்க்கால்வழிசென்றுசேலேறிப்பாயுநெடுமிழலைக்
கார்க்காலமேகமனையாரவர்கள்கனமென்சொல்வேன்
போர்க்காலெழுந்தநரபாலருக்குப்பொருகளத்திற்
றேர்க்காலறினுமவ்வேர்க்காணிலைக்கிற்செருவெல்லுமே.

16. திருவழுந்தூரினன்பாமாலையேமுதற்செந்தமிழும்
மருவழுந்தூருஞ்செழுங்காவியும்புனைமார்பினரா
முருவழுந்தூருமிழலைநன்னாடருழுங்கலப்பைக்
கருவெழுந்தூரும்பொழுதேயுலகங்கருவெழுமே.

17. சீர்முகங்காணக்கவிபாடிப்புல்லரைத்தேடியிந்நாள்
ஆர்முகங்காணுவதென்றேடியோடியலைவதென்காண்
கார்முகங்காணும்பயிர்போன்மிழலையங்காவலர்க
ளேர்முகங்காணும்பொழுதேயுலகுக்கிளைப்பில்லையே.

18. வீட்டுங்கயிறும்பெரும்போர்முனைதனில்மேருவைமுன்
கோட்டுங்கயிறும்கயிறலகாணின்பங்கூர்ந்துநிதி
யீட்டுங்கயிறுமிழலைநன்னாடர்தமேர்முகத்திற்
பூட்டுங்கயிறுலகீரேழுங்காக்கும்புகழ்க்கயிறே.

19. செந்தமிழோங்குமிழலையங்காவலர்செய்யகத்தே
பந்திகளாய்வந்துலகேழுங்காக்கும்பகட்டினையே
தந்திகளோரெட்டுடல்வேறுருக்கொண்டுதாங்குதற்கு
வந்ததொப்பாமென்பதல்லாலுவமிக்கமற்றில்லையே.

20. வேல்கொள்ளும்போரினில்பாலாமறல்கொள்ளுமின்னனையார்
நூல்கொள்ளும்தெய்வப்புலவோரகமந்தநோன்மைமட்டோ
சேல்கொள்ளும்பண்ணைவயல்சூழ்மிழலையிற்செல்வருழக்
கோல்கொள்ளும்போதுபதினாலுலகும்குடிகொள்ளுமே.

21. சீர்நடவாது திருநடவாது திசையரசர்
போர்நடவாது புகழ்நடவாது புவிகட்கெல்லாம்
பேர்நடவாது மிழலைநன்னாட்டுப்பெரும்பதியார்
ஏர்நடவாது விடிலேதுலகிலினிநடப்பே.

22. வருந்திவளர்க்கின்றதாய்மார்கள் தாம்பெற்றமைந்தரையே
திருந்திவளர்க்கின்றதல்லாமல்வேறொன்றைச்சிந்திப்பரோ
பொருந்திவளர்க்குமுலகமெல்லாம்பசிபோக்கவந்த
மருந்தைவளர்க்கின்றதாய்மார்மிழலைவயலெங்குமே.

23. எந்தமுனையுமழுங்காமற்காப்பதிவர்கொழுவென்
றுந்துகடலுலகெல்லாந்தனித்தனியோதலினால்
நந்தலில்பண்ணைவளஞ்சூழ்மிழலைநன்னாட்டில்வந்த
சுந்தரவேந்தர்புகழையெம்மாலினுஞ்சொல்லரிதே.

24. தாரூரும்மார்பர்மிழலைநன்னாடுதழைக்கவந்தோர்
ஏரூரும்போதிலிசையூருந்தேவரினங்கட்கெல்லாந்
தேரூரும்மற்றிவையூராதநாளில்திருட்டுமுகப்
போரூருமன்றியுமிவ்வூரவ்வூரிற்புகவஞ்சுமே?

25. அளிமுகங்காணின்பமாலையரிவிலங்கார்த்தவன்னாட்
டளிமுகங்கான்முகிற்கெல்லாம்பிணைமுன்னஞ்சொன்னவராங்
களிமுகங்காணுந்திசைசூழ்மிழலையங்காவலர்செய்
தெளிமுகங்காணிலெறும்பாதியார்க்குந்தெளிமுகமே.

26. காணும்பொழுது பசிபோகுங்கண்ணுறக்கண்டுடவிற்
பூணும்பொழுதுபுகழுமுண்டாமதைப்பூண்பதன்றி
நாணும்பொழுது பசியாமிழலைநன்னாடருழு
சேணும்திசையும்புகழ்ந்தோதியவயற்சேற்றினையே.

27. நரம்பேறும்யாழொத்தசொல்லார்மதிமிஞ்சும்நாகரிகர்
திரம்பேறுங்கல்வியுடையார்மிழலைச்செழும்பதியார்
குரம்பேறும்பண்ணைவயல்மீதுரத்னம்கொழிக்கும்வச்ர
பரம்பேறும்போதில்உயிரேறும்ஏறும்படியெங்குமே.

28. நாட்டைவளர்த்திடுந்தர்மார்த்தமாதிநடத்தும்வினைக்
காட்டையகற்றுமிது மட்டுமோஎந்தக்காலமுமே
தோட்டைவளர்க்குமிழலையங்காவலர்தூயவிரைக்
கோட்டையிருக்கிலிருக்குங்கண்டீர்மற்றைக்கோட்டைகளே.

29. வேதங்களேது பொருளேது நேயமிகுந்தபஞ்ச
பூதங்களேது புகழேதுகாணிந்தப்பூதலமேல்
நீதங்களாகும்மிழலையங்காவலர்நீள்வயற்குட்
சீதங்கொள்சாலிமுளைவைத்திடாதவர்சிந்திக்கிலே.

30. மெய்ம்முதலாமென்றிசைகொளத்தேடியவீண்முதல்தான்
பொய்ம்முதலாகுவதல்லால்விளையும்புகழ்முதலோ
உய்ம்முதலாகிவருஞ்சீர்மிழலைஉலகுக்கெல்லாம்
கைம்முதலாவது செய்ம்முதலேஎந்தக்காலமுமே.

31. தொடிசூடுமின்பக்குயிலேஇனியிந்தத்தொல்லுலகில்
மிடிசூடிடநிற்பவரெவர்காண்எந்தவேளையுமே
படிசூடுங்கீர்த்திமிழலையங்காவலர்பண்ணைவயல்
முடிசூடும்போது முடிசூடுவாரந்தமூவருமே.

32. பரவைமுழக்கும்பெரும்போர்முழக்குமிப்பாருலகில்
விரவைமுழக்கங்களெல்லாம்தனித்தனிவீண்முழக்காம்
துரவைமுழக்குங்கயல்சேர்மிழலைத்துருவர்செய்யிற்
குரவைமுழக்கம்பதினாலுலகும்குடிவைக்குமே.

33. அளைவாரியுண்டவன்தேடியுங்காணற்கரியனன்பர்
முளைவாரியன்னங்கொடுத்தோர்கள் அம்புயமோங்குவளை
களைவாரியுந்திகள் ஓடும்மிழலையங்காவலர்செய்
விளைவாரிகாணுதற்கன்றோசெருமன்னர்மேற்கொள்வதே.

34. பொன்மாரிபெய்யினும்எப்போது மேகம்புயலைச்சிந்தி
மென்மாரிபெய்யினும்என்னாமுயிர்க்கதில்மேன்மையுண்டோ
சொன்மாரிபெய்யுமிழலைநன்னாட்டுத்துருவர்செய்யில்
நென்மாரிபெய்யும்பொழுதேயுலகம்நிலைநிற்குமே.

35. தாரேறுமின்பப்புயராசர்வெய்யசமர்க்களத்தில்
நேரேறும்போது பயமேறுங்காணதில்நீர்மையுண்டோ
காரேறுஞ்சோலைமிழலைநன்னாடர்களத்தில்வந்து
போரேறும்போது திருவேறுமேறும்புகழ்மிகுமே.

36. வார்கட்டுங்கொங்கையர்க்கெல்லாம்மனங்கட்டும்வாழ்வுகட்டும்
ஏர்கட்டுமற்றவையெல்லாந்தலைக்கட்டுமிம்மட்டுமோ
கார்கட்டுஞ்சோலைமிழலைநன்னாடர்களத்தில்வந்து
போர்கட்டும்போது திசைநாலிரண்டும்புகழ்கட்டுமே.

37. ஈரடிக்குந்தமிழ்ப்பாவால்விளங்குயரீரண்டாஞ்
சீரடிக்கும்பொருள்கண்டோர்மிழலைச்செழும்பதியார்
போரடிக்கும்பொழுதப்போரிடபங்கள்போமடிக்குள்
ஓரடிக்காயிரம்பொன்றான்கொடுப்பினுமொப்பல்லவே.

38. கேளும்புகழிரும்பாபுரிமேலெல்லைகீழெல்லைநீர்
நீளுங்கடலந்தப்பாம்பாறுதெற்கெல்லைநேர்வடபா
லாளும்புவியெல்லைதானம்புலிநதியாய்விளங்கும்
வேளும்புகழெழிற்காராளர்வாழுமிழலையிலே.

39. குலத்திற்பிறந்தசெனகேசன்பால்வந்தகொம்பனையாள்
கலத்திற்பிறந்தபுயத்தானிராவணன்கைப்புகுந்தே
யலத்திற்பிறந்தமிழலைநன்னாடரவர்க்குரித்தாம்
நிலத்திற்பிறந்ததினாலேமரபைநிறுத்தினளே.

40. ஆதிவருடத்தினுக்குப்பத்தொன்பதென்றாரியர்க
ளோதுமந்நாளின்முதன்மண்டகப்படியுண்டுபண்ணி
வேதியராளுடையாரைப்பணிசெல்வவேங்கடப்பனாங்
காதனெல்வேலிமிழலையில்வாழ்கருணாகரனே.

41. ஆவுடையாரையுமேர்ப்புனல்வாயிலமரும்வெள்ளைச்
சேவுடையாரையுமாலாதிகேசவர்சேரும்வெள்ளூர்க்
கோவுடையாரையும்பார்மேற்றனித்தனிகூறவந்த
நாவுடையார்மெய்யுடையார்மிழலைநராதிபரே.

42. தோட்டார்குவளைத்தொடையாருலகந்துதிக்குநிதி
யீட்டாரெவர்க்குமிடையார்புகழலதெவ்வணியும்
பூட்டார்புவிக்குளவகீர்த்தியென்னும்பொருளையென்று
நாட்டார்கனம்பெற்றநாட்டார்மிழலைநராதிபரே.

43. வில்லவர்சோழர்தமிழ்நாடர்யாரும்விரும்புமிசை
வல்லவர்தெய்வமறைநூல்கள்சொன்னவரம்புடையா
ரெல்லவரென்னப்புவியேழினுக்குமேவர்க்குமெத்த
நல்லவராமிவர்கண்டீர்மிழலைநராதிபரே.

44. பூமேவுபொன்னும்புகழ்மேவுமின்னும்பொருமலறக்
காமேவுசெங்கையுடையாருலகிற்குக்கண்ணனையார்
தேமேவுகீர்த்தியரிச்சந்திரன்போலிந்தத்திண்புவியில்
நாமேவுமின்சொலுடையார்மிழலைநராதிபரே.

சிறப்புப்பாயிரம்.

45. தருதஞ்சைவாழும்ப்ரதாபசிங்கேந்த்ரதருமன்மெச்ச
வருமணிமாமுத்திரைவேங்கடாசலமால்சம்ப்ரதி
நரதுங்கமாணிக்கவாசகவேள்சபைநாளையிலே
யுரைசெய்மிழலைச்சதகத்தைச்சர்க்கரையோதினனே.

நெடுநல்வாடை.

இந்த உலகவாழ்க்கையிலே மக்கள் அடையும் இன்பங்கள் எல்லாவற்றிலும் கவிதாலோகத்துப் பேரரசர்கள் சிருஷ்டித்த காவ்யங்களைப் படித்து அனுபவிக்கும் இன்பமே சிரேஷ்டமானது என்பது பெரியவர்களது அபிப்பிராயம். அபியுக்தர் ஒருவர் "இராமகதையைப் பலரும் பாடியிருக்கிறார்கள்; அவர்களிலே கம்பன்பாடிய ராமாயணத்தை வாசிப்பவர்களுக்கு இவ்வுலகஇன்பமும் மேலுலகஇன்பமும் இலேத்திருக்கும்" என்று சொல்லுகிறார். கம்பனும் தன்னுடைய கதாநாயகியான மைதிலியை—சௌந்தரியம் தன்னைச் சேர்தற்குத் தவஞ்செய்த மைதிலியை—வருணிக்கவந்தஇடத்திலே "செஞ்சொற்கவியின்பம்" என்று சொல்லி அதற்குமேலாக ஒன்றுமில்லாமையால் அப்படியே முடித்துவிடுகிறான். கார்லயில் என்பவர் தம்முடைய சிறந்த ஆராய்ச்சியுரை ஒன்றிலே "நாம் ஒருகால் நமது பொன்விளையும் பாரதப்பெருநாட்டை இழக்கநேர்ந்தாலும் ஜெகப்பிரியர் எழுதிய நாடக காவ்யத்தை இழக்கச் சம்மதிக்கமாட்டோம்" என்று சொல்லுகிறார். உமர்கையம் என்ற பாரசீக-கவி தன்னுடைய பேர்போன செய்யுளொன்றிலே "சுகானுபவம் பூர்ணமாகக் கைவருதற்கு அழகியசோலையில் ரசமுள்ள ஒரு நூலும், ஒரு பளிக்கு வள்ளம் நிறைய மதுவும், காந்தை ஒருத்தியும் வேண்டுமென்று கூறி, மதுவையும் பெண்ணையும் பின்னேவைத்து, நூலின் இன்றியமையாமையை முன்வைத்துத் தெரிவிக்கிறார். ஆகவே, மகாகவிகள் எழுதிய காவ்யங்களை வாசிப்பதோ அல்லது கேட்பதோ ஒரு சிறந்த இன்பம் என்பது முடிவாயிற்று.

இவ்விதமான காவ்யங்களை எழுதினவர்களும் கேவலம் மனிதர்களே என்று நாம் சொல்லிவிடுதல் கூடாது. அவர்கள் கவிதாலோகத்தைப் புதிய. புதிய முறையில் அலங்கரிப்பதற்கென்றே பிறந்தவர்கள். பிரகிருதிதேவியின்—சௌந்தரியரூபத்தைக் கண்டு களிக்கும்படியான பாக்கியம் அவர்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது. நாடும், நகரும், காடும், மலையும், கடலும், வானும் முதலியவற்றை நாமும் பார்க்கிறோம்,

அவர்களும் பார்க்கிறார்கள். ஆனால் அவர்கள் பார்வைக்குப்புலனும் அப்பொருள்களினிடையே எழுந்து குதிகொள்ளும் தேஜோரூபம், அவைகளோடு ஒற்றுமையுடைய பிறிதொரு பொருட்காட்சி, அக்கூட்டத்தில் தோன்றிய அதிசயக்களஞ்சியங்கள் முதலியவை நம்முடைய பார்வைக்குச் சிறிதும் புலப்படுவதில்லை. சித்து ஜடம் என்னும் இருவகைப் பிரபஞ்சங்களிலும் அமைந்துள்ள வனப்பையெல்லாம்—சூரியனும் எட்டிப்பார்க்கமுடியாத இடங்களிலே அமைந்துள்ள வனப்பையெல்லாம்—ஒரு கைதேர்ந்த சித்திரகாரன் சித்திரமெழுதிக்காட்டுவது போல அவர்கள் சொற்களிலமைத்துச் சொல்லிவிடுகிறார்கள். அழகுதான் அவர்களுக்குப் பொருள்களின் உண்மை. அழகு வேறு உண்மை வேறு என்று அவர்கள் பிரித்து உணர்வதில்லை. கடலிலே ஒன்றன்பின் ஒன்றாக வரும் அலைகளைப் போல அவர்கள் நினைவுகளும் அடுக்கடுக்காய் வந்துகொண்டேயிருக்கின்றன. பாலைப் பொற்கிண்ணத்தில் ஊற்றிக் கொடுப்பதுபோல அவர்கள் தங்கள் கடல்போன்ற நினைவுகளையெல்லாம் அவைகளுக்கென்றே இருந்தனவோ என்று நினைக்கும்படியான அழகிய சொற்களிலே அமைத்துத் தருகிறார்கள். ஆனால், இவ்விதமான கவீச்சுரர்கள் உலகத்திலே அடிக்கடி வருகிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை. கம்பனைப்போலவும், வள்ளுவரைப்போலவும், ஜெகப்பிரியரைப் போலவும், மில்டனைப்போலவும், கவிசிரேஷ்டர்களை இன்னும் பார்க்கலாம் என்பது அசாத்தியமேயாகும். மேலும், மகாகவிகள் தோன்றுவதற்குக் கால தேச வர்த்தமானங்களும் ஒத்திருக்கவேண்டும். கம்பனை எடுத்துக்கொள்ளுவோம். கம்பனே கவிச்சக்கிரவர்த்தி. மற்றக் கவிகளெல்லாம் அவன்சன்னிதியிலே முடிசாய்த்து நிற்கவேண்டியவர்களே. அவன் அவ்வித உன்னத நிலையைப் பெறுதற்குத் துணைசெய்தன யாவை? வளம்கனிந்த தமிழகம், அங்குள்ள வனிதையர்களின் கற்பு, பேர்போன பல்லவச்சிற்பிகளின் சிற்பஞானமலர்ச்சி, தேவார திவ்யப் பிரபந்தங்களின் ஆன்மஞானவிளக்கம், சோழ பல்லவர்களின் உக்கிரமான வீரப்போர் என்னும் இவைகளல்லவா? அவனே-கருவிலே கவித்திருவுடைய அவனே ஒரு பாலைவனத்திலே பிறந்திருந்தால் இந்தப் பெருநிலையை அடைய ஏற்பட்டேயிருக்காது. ஆகவே, மகாகவிகள் தோன்றுவதற்கு இம்மூன்றும் ஒத்திருக்கவேண்டும் என்பதாயிற்று.

நாம் இதுவரையும் காவ்யங்களையும் கவிசிரேஷ்டர்களையும்பற்றிப் பொதுவாகப் பேசினோம். இனி, நமது நெடுநல்வாடை என்ற கிரந்தத்தை இயற்றிய ஆசிரியரான நக்கீரரைப்பற்றிச் சிறிது பேசுவோம். இவர் பிறந்த ஊர் சமணிருளும் நமது கலியிருளும் ஒருங்கு அகலவந்த ஞானபாஸ்கரன் திரவிடசிசு சம்பந்தமூர்த்திகளின் பாத தாமரைகளைப்பரிசித்து மாதுரியமடைந்த மதுரைமாநகரம். இவருடைய தந்தை ஒரு உபாத்தியாயர். இவர்காலத்திலே எத்தனையோ நல்லிசைப் புலவர்கள் இருந்தார்களாயினும், ஒருவராவது இவருடைய புலமையும் புகழும் பெறவில்லை. இவர்தான் கடைச்சங்கத்தின் கவிவெள்ளத்திலே குறித்த மிக உயர்ந்த அடையாளம். கலைமகளின் பரிபூர்ணகடாக்ஷம் அக்காலத்திலே இவருக்கிருந்ததுபோல வேறு யாருக்கு மில்லை. நீலவானத்தை மலர்வனமாக்கிய நக்ஷத்திரகணங்களுக்குவேந்தாகிய வெண்மதிபோல இவர் அக்காலத்திருந்த கடைச்சங்கப்புலவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கினார். கம்பனைப்போலவோ சேக்கிழாரைப்போலவோ இவர் ஒரு பெருங்காப்பியம் செய்துவிடவில்லை. ஆனாலும், இவருடைய செய்யுட்கள் அந்த மகாகவிகளின்கவிதைகளோடு சேர்த்துவைத்து மதிக்கத் தகுந்தவைகளாகவே யிருக்கின்றன. பிரகிருதிதேவி எப்பொழுதும் இவருடைய இருதயத்தில்தான் நிர்த்தனம்செய்கிறாள். அவள் வனப்பெல்லாம் இவரதுசெய்யுட்களிலே மலர்ந்து மணக்கின்றன. இவருடைய மாணிக்கக்கவிகளைப் பெறாத சங்கநூல்கள் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். நெடுநல்வாடை என்ற கிரந்தந்தான் இவருடைய செய்யுள்களுக்கெல்லாம் நடுநாயகமணியாகத் திகழ்வது. அவ்வரிய கிரந்தத்தைப் பெறுவதற்குப் பாக்கியம்செய்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.

பாண்டியன் நெடுஞ்செழிய னென்பது இவனுக்கு இயற்பெயராகத் தெரியவில்லை. 'பாண்டியன்' என்று குலப்பெயர் முன்வந்திருப்பதால் நெடுஞ்செழியனென்பது இவனது பெருவளத்தைக்குறிக்கவந்தபெயராகத்தா னிருக்கவேண்டும். மதுரைத் தலபுராணமும் இவனுடைய இயற்பெயரைக் கூறவில்லை. தமிழ்நூல்களைப்போலவே அந்த வடமொழி நூலும் இவன் பாண்டியர்குலதிலகனாகவிளங்கியது பற்றி, இவனை 'வம்சசேகரன்' என்கின்றது. ஆனால் அந்நூல் இவனது வீரச்செயல்களைக்

குறித்து ஒன்றும் சொல்லவில்லையே யென்று சிலர் நினைக்கலாம். மதுரையிலுள்ள சோமசுந்தரக்கடவுளது அதிஅற்புதத்திருவிளையாடல்களைக் கூறுவதே அதன் பிரதானநோக்கமாகையால் இவ்விஷயங்களைக் குறிக்கவில்லை. அதுகொண்டு வம்சசேகரன் இவனின் வேறு என்று சொல்லிவிடுதல் முடியாது. இன்னும் நெடுஞ்செழியன் என்ற பெயரோடு இருவர் பாண்டியர்கள் இருந்ததாகத் தெரிகிறது. அவர்களில் முன்னவன்தான் சிலப்பதிகாரத்தில்வந்த நெடுஞ்செழியன்; பின்னவனே நம்முடைய நெடுநல்வாடைபெற்றநெடுஞ்செழியன். இவ்விருவரும் வேறு வேறு என்பதை ஒருசிறிது காட்டுவோம்.

சிலப்பதிகாரம் பாடியவர் இளங்கோவடிகள்; இவர் சேரநாட்டை அரசுபுரிந்த செங்குட்டுவன்சகோதரர்; மூவேந்தர்களையும் ஏற்றத்தாழ்வின்றிச் சமமாகப் புகழ்ந்துபாடுவதையே கடமையாகக்கொண்டவர். இந்த வாய்மொழிப்புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனைப்பற்றிப் பேச வந்தவிடத்து அவன் குலமுதல்வர்களது வீரச்செயல்களையும் அவன் வடவாரியர்படைகடந்த ஒரேவெற்றியையுமே கூறுவதன்றி வேறு ஒன்றும் சொல்லவில்லை. அதனால் இந்த நெடுஞ்செழியன் வடநாட்டுக் கன்னிப்போருக்குப்பின் சாந்தசித்தனாய்ப் போரில்விருப்பமின்றி அந்தப்புரமே அழகிய பாடிவீடாகக் கருதிவிட்டானென்று தெரியவில்லையா? இன்னும் இப்பாண்டியனது ராஜாங்கமுத்திரையான கயல், சேரசக்கிரவர்த்தியான செங்குட்டுவனது இலாஞ்சினையிலே அவன் 'விற்'குறியோடு சேர்ந்திருந்ததாகத் தெரிகிறது.* அப்பொழுது இவன் அச்செங்குட்டுவனது ஆக்ஞைக்கு அடங்கித் திறைசெலுத்திவாழ்ந்தவனாகிறான். இப்படியிருந்த இவனையும் போர்புரியாநாளைப் பிறவாநாளாகக் கருதி 'வில் என்னும் நெடுவரையால் வேந்தென்னும் கடல்கலக்கி' விஜயலக்ஷ்மியைப் பெற்று அவளைத் தன் விஜயாலயத்தில் வீற்றிருக்கும்படிசெய்த வேந்தர் வேந்தனான நெடுநல்வாடைபெற்ற நெடுஞ்செழியனையும் ஒருவர் என்று சொல்லுவ தெப்படி?

மேலும், நெடுநல்வாடைநெடுஞ்செழியன் சேரநாட்டின் ஒரு பகுதியை அரசாண்ட கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை யென்பவனை வென்று சிறைப்படுத்தியிருக்கிறான். "இந்த

* சிலப்பதிகாரம் காட்சிக்காதை-171.

மாந்தரஞ்சேரலிரும்பொறைக்குச் சிறிதுமுன் அந்நாட்டை ஆண்டவன் இளஞ்சேரலிரும்பொறை. இவனுக்குப் பிதாமகன் செல்வக்கடுங்கோ வாழியாதன். இக்கடுங்கோவுக்கு மகட்கொடுத்த மாமன் வேளாவிக் கோமான்பதுமன். பதுமன் தன் பெண்மக்களிருவரிலே ஒருத்தியைச் செங்குட்டுவன் தந்தையான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் மற்றொருத்தியை இக் கடுங்கோவுக்கும் மணஞ்செய்துகொடுத்தான்.* ஆகவே நெடுஞ்சேரலாதனும் செல்வக்கடுங்கோவும் 'சகல'முறையின ராயினர். இந்த முறையில் இக் கடுங்கோவினதுபுத்திரன் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையும் நெடுஞ்சேரலாதன்மகன் செங்குட்டுவனும் சகோதரபாந்தவ்ய முடையவர்களாகிறார்கள். அந்த முறையில், பெருஞ்சேரலிரும்பொறைமகனான இளஞ்சேரலிரும் பொறைக்குச் செங்குட்டுவன் பெரியதந்தையாகவேண்டும். இந்த இளஞ் சேரலிரும்பொறைக்குப் பின் அரசுரிமையெய்திய கோச்சேரமான்யானைக் கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறையைச் செங்குட்டுவன்காலத்திலேயே சிவலோகமடைந்த நெடுஞ்செழியன் வென்று சிறைப்படுத்தினான் என்று சொல்லுவது அசம்பாவிதமல்லவா?

இன்னும், பொருந்திலிளங்கீரனார் என்னும் புலவர், இந்த இரும் பொறையைப் பாடிய பாட்டிலே, "தாழாது, செறுத்த செய்யுட் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன், இன்றுள னாயின் நன்றுமன்!"† என்று கபிலர் அன்றில்லாமையை இவன் கருதுவதாகச் சொல்லுகிறார். அதனால், கபிலர் இவனுக்குமுந்தியே தன் நண்பன் பாரியைப் பிரிந்த துயரால் வடக்கிருந்து‡ உயிர் துறந்தா ரென்பதாயிற்று. கபிலரொடு ஒருகாலத்திருந்தவர் பரணரென்ற பெரும் புலவர்; இவர்களிருவரும் ஒன்றியகேண்மையுடையவர்களென்பதும் ஒருகாலத்தவர்களென்பதும் இவர்களைக் 'கபிலபரணர்'என்று ஒருங்கு சேர்த்துக் கூறுவதுகொண்டும், வையாவிக்கோப்பெரும்பேகனால்

---

* பதிற்றுப்பத்து, எட்டாம்பத்துப் பதிகம்.

† புறம் 53. பதிற்றுப்பத்து எட்டாம்பத்துப் பதிகம்.

‡ வடக்கிருத்தலென்பது கிழக்குமுகமாகத் தருப்பைப்புற்களைப் பரப்பி அவற்றின்மேல் வடக்குமுகமாக இருந்து உண்ணாமல் தம் உயிரைவிடச்செய்து கொள்ளும் ஒரு விரதம். இதனை வடநூலார் ப்ராயோபவேசம் என்பர்.

துறக்கப்பட்ட கண்ணகி என்னும் கற்பரசியை அவன் மீளவும் சேர்த்துக் கொள்வதற்கு இவர்கள் இருவரும் பாடியதுகொண்டும் அறியலாம். இவர்களில், பரணர் சேரன்செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தாற் பாடி உம்பற்காட்டுவாரியையும் அவன்மகன் குட்டுவன்சேரலை யும் பரிசிலாகப் பெற்றிருக்கிறார். இவற்றால் மாந்தரஞ்சேரலிரும்பொறை காலத்திலே கபிலரும் இல்லை; கபிலரதுதோழரான பரணராற் பாடப் பட்ட செங்குட்டுவனும் அவன்காலத்திலேயே அரசுகட்டிலில் துஞ்சிய சிலப்பதிகார நெடுஞ்செழியனும் இல்லையென்பதாயிற்று.

மேலும், எட்டாவது நூற்றாண்டில் ஞானச்செல்வர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்முடைய அமுதவாக்கிலே "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரிலை" என்று குறித்தருளிய வேள்பாரி யெனனும் பெருவள்ளலது மலையரணை மூவேந்தர்களும் முற்றியிருந்த பொழுது அவன் உயிர்த்துணைவரான கபிலர் அடைமதிற்பட்டமையால் உணவில்லாமல்வருந்துகிறவர்களுக்கிரங்கிக் கிளிப்பிள்ளைகளை வளர்த்து வெளியே உள்ள விளைநிலங்களுக்கு அனுப்பி நெற்கதிர்களைக் கொண்டு வரும்படிசெய்தகதையை நக்கீரர்,

"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செந் நெல்லின் விளைகதிர் கொண்டு
நெடுந்தா ளாம்பன் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையாது
ஆளிடூஉக் கடந்து வாளம ருழக்கி
ஏந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே"*

என்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார். அல்லாமலும், மதுரையிலே ஆரியம் அறிந்த 'கொண்டான்' என்ற குயவன் வந்து தெற்கில்வாயில் திறவாத பட்டிமண்டபம் † ஏறி 'ஆரியம் நன்று; தமிழ் தீது' என்றுகூற

* அகம் 78.

† பட்டிமண்டபம்–வித்தியாமண்டபம்.

ஆங்கிருந்த நக்கீரர் கோபம்கொண்டு அவன் சாகும்படியாகப் பாடிய அங்கதப்பாட்டிலே,

'முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரணர் கபிலரும் வாழி'

என்று கபிலபரணர்களை அகத்தியமுனிவரோடுசேர்த்து அவர்கள் தமக்கு முன்னிருந்ததைக் குறிக்கிறார்.* இவைகளால் இவர் கபிலருக்கும் அவர் நண்பரான பரணருக்கும், அவராற் பதிற்றுப்பத்திற் பாடப்பட்ட செங்குட்டுவனுக்கும் சிறிது பின்னிருந்தவராகிறார். மேலே சொல்லி வந்த காரணங்களால், சிலப்பதிகாரத்தில்வந்த நெடுஞ்செழியனும் நெடுநல்வாடைபெற்ற நெடுஞ்செழியனும் வேறுவேறென்பதும், சிலப்பதிகார நெடுஞ்செழியனே முற்பட்டவனென்பதும் தெளிவாயின.

நமது நெடுஞ்செழியன் ஒரு விறுவிறுப்புள்ள போர்வீரன். அருங் கலைவிநோதன்; அமராபரணன். போர் என்றாலே இவன் தோள்கள் பூரித்துவிடும். யுத்தத்துக்கென்று புறப்பட்டுவிட்டால் வாகைசூடத் தப்புவதில்லை. தமிழ்நாட்டிலே இவன் சாம்ராஜ்யத்தை ஒப்புக்கொள்ளாதவேந்தர்களே கிடையாது. தன்னுடைய அழியாத ஆண்மையினாலும் சௌரியத்தினாலும் இவன் தனக்கு வெற்றித்திருவையும் தன் ராஜ்யத்துக்குக் கீர்த்திப்பிரதிஷ்டையையும் தேடிக்கொண்டுவிட்டான். 'அழும்பில்'நகரமன்னனான மானவிறல்வேள் இவன் ஆக்ஞைக்குக் கீழ்ப்படியக் கொஞ்சம் தாமதித்தான்; வந்தது கேடு; தன் செழுமையான ஊரும் இழந்தான்; உயிர்தப்புவதும் தெய்வப்பிரயத்தனமாகிவிட்டது. துறைமுகப்பட்டினங்களான நெல்லூரும் முதுவெள்ளிலும் இமைகொட்டும்நேரத்திற் கைவசமாயின. குட்டநாடென்று அலைப்புழைக்குக் கிழக்கே யிருக்கிறது. அந்நாட்டுமன்னர்கள் இவன் ஆதிக்கத்தை அறிந்து புத்திசாலித்தனமாகத் திறைசெலுத்தத் தீர்மானித்துவிட்டார்கள். தொண்டியென்னும் பேர்போன துறைமுகப்பட்டினத்தை—தாலமி † என்ற பூகோளசாஸ்திரி குறித்துள்ளபடி மேல்நாட்டுமரக் கலங்கள் பொன்னை ஏற்றிவந்து மிளகும் மயிற்றோகையும் யானைத்தந்தமும் ஏற்றிச்செல்லும் துறைமுகப்பட்டினத்தை—ஆண்ட கோச்சேரமான்

* தொல், பொருள், செய்யுளியல் 179 உரை.

† Ptolemy.

யானைக்கட்சேய்மாந்தாஞ்சேரலிரும்பொறையை இவன் வென்று சிறைப் படுத்தினான். ஆனால் அவன் ஒரு வீரனைப்போலச் சிறைக்காவலைக் கடந்துபோய்த் தன் அரசுரிமையைக் கொள்ளவே இவன் அவனை மீள வும் வருத்த மனமில்லாமல் இருந்துவிட்டான்.

இப்படி இவனுக்கு ஒன்றன்பின் ஒன்றாக வரும் வெற்றிகளையெல் லாம் காணவே மற்றைச் சேர* சோழர்களான இருபெருவேந்தர்களுக்கும் திகில் ஏற்பட்டுவிட்டது. எந்தவிதத்திலும் இந்த மதுரைநகரத்து நெப்போலியனை நசுக்கிவிடவேண்டுமென்று நினைத்தார்கள். அதனால் அவர்கள் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற ஐந்து சிற்றரசர்களையும் தங்களோடுசேர்த்துக்கொண்டு எழுவராக யுத்தஞ்செய்யத் தொடங்கினார்கள். இந்த எழுவர்களுக்கும் அஞ்சினவனா நமது நெடுஞ்செழியன். தலையாலங்கானம் † என்ற இடத் திலே கடல்போல ஆரவாரிக்கும் அவர்கள் சேனைகளையெல்லாம் தன்னந் தனியாகவே எதிர்க்க வந்துசேர்ந்தான். இவன் படைவீரர்களும் சாமா னியமானவர்களில்லை. முன்வைத்தகாலைப் பின்வாங்காத மறவர்கள். காவிரியாறு கரைபுரண்டுவந்தாலும் அதனைச் சிறிதும் மதியாது தடுத்து நிற்கும் கரிகால்வளவன்கட்டிய கல்லணைபோலப் பகைவர்களை முன்னேற வொட்டாது தடுத்துநின்று போர்புரிகிறவர்கள். அத்தகைய வீரர் களின்வரிசைகளுக் கயலே பாண்டியன் மகாகம்பீரத்தோடு நின்றான். இவன் முடியிற் சூடிய வஞ்சிமலர்க்கொத்துக்கள் புத்தொளியையும் புது மணத்தையும் தந்து காண்பவர்களுக்குப் பீதியை உண்டுபண்ணின. கையிலேந்திய வேற்படையோ "பளபளவென்று மின்னி உக்கிரகுமரன் கடல்சுவற வீசிய வடிவேலை நினைப்பூட்டியது. அரைப்பட்டிகையிற் செருகியிருந்த குத்துவாளும் நீளத் தொங்கவிட்டிருந்த உடைவாளும் மிகுந்த சோபையுற்றுத் திகழ்ந்தன. அந்நேரம் பாண்டியர் போர்முரசம்

* இச்சேரன், முன்கூறிய கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தாஞ்சே ரலிரும்பொறையன்று. இரும்பொறை வெள்ளிவீழ்ச்சி காரணமாக இறந்தா னென்று கூடலூர்கிழார் சொல்லுகிறார். இவனோ தலையாலங்கானப்போர் முனையிலேயே இறந்துபோகிறான். ஆகையால் இவன் வஞ்சியாண்ட் சேரர் பரம்பரையினன் என்றே கொள்ளவேண்டும்.

† இவ்வூர் தலையாலங்காடு என்று வழங்கப்படும். இது சோழநாட்டிலே காவிரியாற்றுக்குத் தென்கரையிலே உள்ளது; தேவாரம்பெற்ற சிவஸ்தலம்,

வானில் இடியொலிபோல முழங்கியது. அதேசமயத்தில் இவனைச் சிறிதும் மதியாமல்வந்த அந்தப் பகைவர்களின் சேனசமுத்திர ஆரவாரமும் எழுந்தது. வந்துவிட்டது கோபம் பாண்டியனுக்கு. கண்கள் நெருப்பெழும்படி சிவந்தன. அப்பொழுது இவன் தன் சேனைகளையும் சேனைத்தலைவர்களையும் பார்த்து,

“ நகுதக் கனரே நாடுமீக் கூறுந
ரிளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல் சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணது
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே ”*

என்ற மகாநாதம்பொருந்திய இந்த வீரவசனங்களைச் சொன்னான். சிறிதுநேரத்துக்கெல்லாம் இருதிறத்தாருக்கும் போர்தொடங்கியது. இருதிறத்தாரும் இளையாமல் நெடும்பகல் யுத்தம்புரிந்தனர். முடிவிற் பாண்டியனே வெற்றிபெற்றான். பகைவர்சேனைகளெல்லாம் சின்னபின்னமாயின. மன்னர் எழுவரும் தங்கள் கோப்பெல்லாம் குலைந்து சமரபூமியிலேயே உயிரும் இழந்தனர். பாண்டியன் வெற்றிமுரசம் முழங்க மதுரைக்குத் திரும்பினான்.

*புறம்—72.

இந்தத் தலையாலங்கானப் பெருவெற்றிதான் மதுரைநகரத்துக்கு 'உரைகுறுகநிமிர்கீர்த்தியை' உண்டாக்கிவிட்டது. காவியப்புலவர்களும் ஓவியசிரேஷ்டர்களும் சிற்பநிபுணர்களும் தோன்றி அத்திருநகரைச் சொல்லும் துகிலிகையும், கல்லும் மண்ணும் கொண்டு புதுப் புதுப் புதுமைகளாக அலங்கரிக்கத் தொடங்கினார்கள். அந்நகரிலேயே பிறந்து வளர்ந்த சங்கத்தமிழ்மகள் "சொன்னலங் கடந்த காமச்சுவையை ஓர் உருவ மாக்கி, இன்னலம் தெரிய வல்லார் எழுதிய" சித்திரம் என்று சொல்லும்படி அவ்வளவு அழகுடையவளானாள். போரில் வெற்றிபெற்ற சூரனோ, வேங்கடமலைமுதற் குமரிமுனைவரையு முள்ள புகழ்நிறைந்த தமிழ்நாட்டுக்குச் சம்ராட்டாகிவிட்டான். இவ்வளவு பெருமைவாய்ந்த வீரப்பாண்டியர்கள் இவனுக்கு முன்னும் இல்லை; பின்னும் இல்லை. இத்தகைய வீரன் தன் காதல்மனைவியின் கரியகூந்தலில் உள்ள நறுமணத்தை அறிந்து பாடிய புலவனுக்குப் பரிசுவழங்கினான் என்று மதுரைத் தலபுராணம் கூறுகிறது. ஆனாலும், இதனினும் இவன் மனத்தை முழுதும் கிரகித்திருந்த வேறு பெருஞ்செயல்கள் நிச்சய மாகவே இருந்தனவென்பதற்கு நக்கீரர்பாடிய இந்த நெடுநல்வாடையே பொருத்தமான சாக்ஷியாகும். தலையாலங்கானத்துப் போர்முனையி லிருக்கும் இவன் போரை முடித்துக்கொண்டு பல நெடிய இரவுகளாகத் தனியே யிருந்து புலம்பிக் கண்ணீர்வடித்து வருந்தும் தன் கோப்பெருந் தேவி மகிழும்படி வந்துசேரவேண்டுமென்று தெய்வத்தைத் துதிப்ப தாகவே இக்கிரந்தம் அமைந்திருக்கின்றது.

மேலேகூறிய பலஇரவுகளிலே ஒன்றைத்தான் நம்முடையகவி இங்கே வருணிக்க எடுத்துக்கொள்கிறார். அவர் நமக்குக் காட்டவேண்டு மென்றிருக்கும் காட்சி அரண்மனையின் அந்தப்புரத்தில் இருக்கிறது. அதற்கு அவர் நம்மை நகரத்துக்கு நெடுந்தூரத்திலுள்ள கிராமாந்தரங்களி லிருந்தே அழைத்துவருகிறார். மழைக்காலமாகையால் எங்கும் வெள்ளக் காடாக இருக்கிறது. அதனால், கிராமங்களிலுள்ள இடையர்களெல்லாம் தங்கள் பசுமந்தைகளை ஊருக்கு நெடுந்தூரத்திலுள்ள மேட்டுநிலங்க ளுக்குக் கொண்டுபோய் மேயவிட்டிருக்கிறார்கள். கார்த்திகைமாதத்திற் செம்பாதி கழிந்துவிட்டது. இதற்குமுன்னெல்லாம் கன்னங்கறே லென்று கருத்து இடைவிடாமல் ஒரேரீதியாகப் பெருமழைபொழிந்த

மேகம் இப்பொழுது கொஞ்சம் வெளுத்திருப்பதோடு சிறுசிறு தூறலாகத் தூறவும் பழகிவருகின்றது. அதனைத்தான் நம் புலவர் "துவலைகற்ப" என்கிறார். குளிர் இன்னும் குறைந்தபாடில்லை. வடக்கிலிருந்து வரும் வாடைக்காற்றும் அதிபயங்கரமாகவே வீசிக்கொண்டிருக்கிறது. மரங்களிலிருக்கும் மந்திகள் கிளைக்குக்கிளை தாவித்திரிவதைவிட்டுக் குளிரைத் தாங்கமுடியாமல் உறுப்புக்களையெல்லாம் சுருக்கிக்கொண்டு நடுநடுங்கியிருக்கின்றன. காற்று வேகமாக அடிப்பதாற் பறவைகள் மரத்திலிருந்து கீழே விழுந்துவிடுகின்றன. காட்டாறுகளிலே வெள்ளிய மணல்பரந்த கரைகளிலே செங்கால்நாரைகளும் பைங்காற் கொக்குகளும் மழை சிறிது நின்றதும் கூட்டங்கூட்டமாக வந்து, நீரோட்டத்தை விட்டுக் கரையருகில் தேங்கிக்கிடக்கும் ஜலத்துக்குவரும் கயல்மீன்களைக் கௌவியுண்டு உலவுகின்றன. பசுக்களுக்குத் தங்கள் கன்றுகளிடத்திற் கொள்ளை ஆசை உண்டல்லவா? இப்பொழுது அந்த ஆசையெல்லாம் எங்குதான்போயினவோ தெரியவில்லை; அக்கன்றுகள் தங்கள் சமீபத்தில்வந்ததும் காலால் உதைத்துவிடுகின்றன. இடையர்களுக்கோ மட்டுக்குமிஞ்சின வெறுப்பு. தங்களுக்கு இஷ்டமான இடங்களுக்குச் சென்று அங்கங்குள்ள சோலைகளிலேபூத்த பலநிறப் பூக்களைப் பறித்துக் கண்ணியும் மாலையும் கட்டி விளையாடுவதற்கு இது சமயமில்லை. மேலும் அவர்கள் இப்பொழுது இருக்கும் இடமோ ஊருக்கு வெகுதூரம். அங்குதான் என்ன பயங்கரமான தனிமை! என்ன கொடுமையான அந்தகாரம்!! "கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள்"தான் அது. வாடையோ எலும்புகளையும் ஊடுருவிச்சென்று வாட்டும்போலிருக்கிறது. இடையர்களுக்குப் பற்கள் ஒன்றோடொன்று மோதிக் கிடுகிடுவென்று பறைகொட்டத் தொடங்கிவிட்டன. அதனால் அவர்கள் சிறுசிறுகூட்டமாகக் கூடியிருந்து நெருப்பை வளர்த்து அதிலே தங்கள் கைகளை வாட்டிக் கன்னத்தில் ஒற்றுகிறார்கள். காடெல்லாம் புதர்கள்தோறும் முசுண்டைக்கொடிகளும் பீர்க்கங்கொடிகளும் படர்ந்து வெள்ளை நிறப் பூக்களையும் பொன்நிறப்பூக்களையும் பூத்து விளங்குகின்றன.

இனிப்புலவர் நம்மை இங்கிருந்து நேராக நகரத்துக்கு அழைத்துச் செல்கிறார். நாம் போகும்வழியெல்லாம் வானளாவியமரங்கள், நந்தவனங்கள், அழகிய வயல்கள்; 'முத்தம் ஈன்று மரகதம்போற் காய்த்துப்

பவளம் பழுக்கும் கமுகந்தோப்புகள். இப்பொழுது வயல்களிலெல்லாம் கதிர்கள் நன்றாக முற்றித் தலைவணங்கிக் கிடக்கின்றன. கமுகந்தோப்புக்களிலே பாக்குக்காய்க்குலைகள் உள்ளே இனியநீரைக்கொண்டு பச்சைப் பசேலெனத் திரண்டு முற்றிய காட்சி காண்பவர் கண்களைக் கொள்ளை கொண்டுவிடுகிறது. சாலைகளிலேயுள்ள மரங்களின் கொம்புகளிலும் இலைகளிலும் தங்கியிருந்த நீர்த்துளிகள் இடையிடையே சொட்டுச் சொட்டென்று துளிக்கின்றன.

மாலைநேரமாகிவிட்டது. நாம் மதுரைநகரத்துக்குப் போகும் பொழுது ஆறுகிடந்ததுபோல அவ்வளவு அகன்ற நெடிய நகரப்பெருந் தெருவிலே உடல்வலிபெற்ற மிலேச்சர்கள் மாலைகளை அணிந்துகொண்டு கள்ளை வேண்டுபட்டும் குடித்து வெறி ஏறித் தங்கள்மேலே விழும் மழைத்துளிகளைச் சிறிதும் லக்ஷியம்செய்யாமல் இங்குமங்கும் திரிகிறார்கள்.

இந்தக் குடிவெறிகொண்ட பரதேசிகள் யார்? முக்கியமாக அவர்கள் எந்தநாட்டைச் சேர்ந்தவர்கள்? என்று நம் புலவரைக்கேட்டுத் தெரிந்து கொள்ள நம்மவரில் யார்தான் ஆசைப்படாதவர்கள்? ஆனால், புலவரோ இப்பொழுது ஒன்றும் சொல்லுகிறதாக இல்லை. அவர் நினைவெல்லாம் ஏதோ ஒருவிஷயத்திற் குவிந்திருக்கின்றது. ஆகையால் நாம் இந்த ஆசையைச் சிறிது மட்டுப்படுத்திக்கொள்வோம். தெருவிலே இரண்டு சிறகுகளிலும் உள்ள வீடுகளில் வசிக்கும் பெண்கள் பூங்கூடைகளிலே வைத்திருந்த பிச்சியரும்புகள் மலர்ந்து மணப்பதைக்கொண்டு மாலைப் பொழுதை அறிந்து இரும்புவிளக்குகளை ஏற்றி நெல்லையும் மலரையும் தூவித் தங்கள் அந்திவணக்கத்தைச் செய்கிறார்கள். வீட்டில் வளரும் சேவற் புறாக்களுக்கோ இவ்விதம் பகலையும் இரவையும் பிரித்துத் தெரியக்கூடவில்லை. அதனால் அவைகள் தங்கள் காதற்பெட்டைகளோடு வெளியிடங்களுக்குப் போய் இரைதேடுவதை மறந்து கபோதகத்தலையிலே சோம்பியிருக்கின்றன. கால்கடுக்கின்றது. அதற்காக இருந்தநிலையைமட்டும் சிலநேரம் மாற்றுகின்றன. ஏவற்காரர்கள் கருங்கொள்ளுப்போல நிறமுள்ள குழியம்மியிலே கத்தூரிக்கூட்டு முதலிய வாசனைக்கூட்டுகளை அரைக்கிறார்கள். இந்தக் குளிர்ந்த காலத்திற் சந்தனக்கட்டையையும் கல்லையும் யார் வேண்டப்போகிறார்

கள்? ஆகையால் அவை மூலைகாக்கப் போய்விட்டன. மனத்தைக் கொள்ளைகொள்ளும் மலர்மாலையிலுங்கூட இப்பொழுது அசிரத்தை ஏற்பட்டுவிட்டது. மண்'கூஜா'க்களைத் தீண்டுவாரே இல்லை. விசித்திர வேலைப்பாடமைந்த விசிறிகளெல்லாம் உறையிட்டுச் சுவரிலுள்ள வளைந்த முளைக்கோல்களிலே தூங்குகின்றன. சிலந்தி இதுதான்சமயமென்று அவைகளின்மேல் தன் மெல்லிய அழகிய வலையைப் பின்னத்தொடங்கி விட்டது. இப்படி மண்'கூஜா'க்களும் விசிறிகளும் விடுமுறைநாளை அனுபவிக்கவே அவற்றின்ஸ்தானத்தில் நெருப்புத்தகழியும் தூமத் தகழியும் வந்து மிகுந்த ஒய்யாரத்தோடு பயன்படுகின்றன. காந்தையர் கள், புகைக்கும் அகலிலே அகிற்கட்டையும் கண்டசருக்கரையும் இட்டுப் புகைத்து அப்புகையைத் தங்கள் அடர்ந்த நெய்ப்புள்ள கரிய கூந்த லுக்கு ஊட்டிப் பூச்சூடாமலிருப்பது அமங்கலமென்று ஒன்றிரண்டு பூக்களைத் தலையிற் சூடுகிறார்கள். மேல்மாடங்களிலே சாளரங்கள் ஒன்றாவது திறந்திருக்கவில்லை; எல்லாம் தாழிடப்பட்டிருக்கின்றன. உப்பரிகையிலே வேனிற்காலத்துக்கென்று அமைந்த பள்ளியறைகள் தீண்டாதவர்கதியைச் சம்பூர்ணமாகப் பெற்றுவிட்டன. நாடகப் பெண்கள் நடிப்பதைக் கூட்டோடு மறந்துவிட்டார்கள். பாடவிரும்பி வீணையை எடுக்கிறார்கள். ஆனால் வீணையின் நரம்புகள் குளிரால் நிலை குலைந்திருக்கின்றன. அதற்காக அவர்கள் அவைகளைத் தங்கள் சூடுள்ள மார்புகளிலே தடவி நேரானஸ்திதிக்குக்கொண்டுவந்து வீணை யும் குழையும்படி அதனோடு லயித்து ஆரோகண அவரோகணக் கிரம மாகப் பாடுகிறார்கள்.

இதனிடையே நாமும் அரண்மனையின் கோபுரவாசலுக்கு வந்து விட்டோம். வாசலோ மலையைக் குடைந்துதான் அமைத்திருக்கிறதோ என்று சொல்லும்படி அவ்வளவு உயரமாக இருக்கிறது. பட்டத்து யானை விஜயக்கொடியோடு போனாலும் வாசல் தட்டப்போகிறதில்லை. வாசற்கதவுகள் உறுதியும் சிற்பக்கலையின் சாதுரியமும் அழகும் வாய்ந்து புகையும் புகமுடியாதபடி நன்றாகப் பொருந்தியிருக்கின்றன. இருந்தாலும் புலவர்பெருமானது பூர்ணமான ஆதரவு நமக்கிருப்பதால் நாம் அரண்மனையின்முற்றத்துக்குட் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். முற்றத்திற் கவரிமானும் அன்னமும் விளையாடு

வதைக் கண்டு களிப்பதற்காக வெள்ளிய மணல் பரப்பப்பட்டிருக்கிறது. மச்சிலே நிலாமுற்றத்திலுள்ள நீர்மடைகளிலிருந்து மழைநீர் விழுகிறது. குதிரைகள் நிலையிலேயேநின்று புல்லைக் குதட்டிக் கனைக்கின்றன. கூட்டி லிருக்கும் மயில்கள் கொம்பு ஒலிப்பதுபோல அகவுகின்றன. இவை தான் அரண்மனையின் நிசப்தத்தைக் கெடுப்பவைகள். இனி நாம் கோயிலி னுள்ளே பிரவேசிப்போம். வழியெல்லாம் யவனச்சிற்பிகள் நிருமித்த கண்கவரும் வனப்புடைய பாவைவிளக்குகள் பிரகாசிக்கின்றன. இந்த யவனர்களைப்பற்றியும் அவர்கள் கைவரிசைகளைப்பற்றியும் நாம் தெரிந்து கொள்ளவேண்டுமென்கிறோம். ஆனால் புலவரோ நம்முடைய கேள்வி களுக்குச் சிறிதும் செவிகொடுப்பவராக இல்லை. அவர் அந்தப்புரத்தை ஒருதுளியும் விடாமல் வருணிப்பதற்காக எண்ணுக்கடங்காத தீபங்க ளின்வரிசைகளையுடைய மண்டபங்களையும் அறைகளையும் திண்ணைகளை யும் கடந்து அதிவேகமாகச் செல்லுகிறார். மாடங்களெல்லாம் மலைகள் போல அவ்வளவு உயரமானவை. அவற்றின் உச்சியிற் கட்டிய பலநிறக் கொடிகள் வானத்திலிட்ட இந்திரதனுசை நினைப்பூட்டுகின்றன. இவை களிலே அந்தப்புரம் வேந்தனல்லது வேறு யாரும் போகமுடியாதபடி கட்டும் காவலும் அமைந்தது. ஆனாலும் என்னதுணிவு புலவருக்கு. சிறிதும் பயமில்லாமல், சர்வசாதாரணமாக நம்மை நேராகப் பள்ளி யறைக்கே அழைத்துக்கொண்டுவந்துவிட்டார்.

பாருங்கள் அதோ பள்ளியறை. விலையேறிய யானைத்தந்தத்திலே செய்த இலைத்தொழிலமைந்த தந்தக்கட்டில். கட்டிலின் நடுவெளி நல்ல நிறமுள்ள சாயத்தைக்கொண்டு புலியினது வரிகள் எழுதிய நாடாவி னாலே பின்னியிருக்கிறது. அழகிய பட்டில் தைத்த பஞ்சணை. அன் னங்கள் தங்கள் காதற்பெருக்கிலே உதிர்த்த மிகமெல்லிய தூவிவிரிப்பு. புதுமணம்நாறும் வெள்ளைவெளேலென்ற முல்லைமலர்ப் பரப்பு. சீனத் துப்பட்டு என்னும்படி கழுவிச் சிறந்த சீலையின்மடிப்பு. கட்டிலைச் சூழ வரிசைவரிசையாகக் கோத்த முத்துவடங்கள். கால்களிலெல்லாம் சின்னஞ்சிறிய சிற்றுளிவேலைகள். விதானமெல்லாம் கண்களை விருந் தூட்டும் கவினுடைய சித்திரங்கள். அதிகம் விரிப்பானேன்; இந்தக் கட்டில் உலகெங்கும் பேர்போன தமிழத்தச்சர்களது கைநபத்துக்கு வரம்பாகவும், பாண்டியர்கள் பெருஞ்செல்வத்துக்கு அறிகுறியாகவுங்

தான் அமைந்திருக்கிறது. நல்லது, புலவர் நமக்கு இப்பொழுது அந்த மஞ்சத்திலே ஒரு சுந்தரவதி படுத்திருப்பதாகக் காட்டுகிறார். அவள் உறங்கவில்லை; நன்றாக விழித்துக்கொண்டுதானிருக்கிறாள். ஆனாலும் என்ன? அந்த ஆடவர்செல்லா அந்தப்புரத்திலே நாம் இந்த ஊனுடம்போடுசென்றிருந்தாலும் நம்மை அறியக்கூடாதபடி ஒரு பெருங் கவலை அவள் உள்ளத்தை முழுதும் கிரகித்திருக்கிறது. அவள் யார் என்று நினைக்கிறீர்கள்? அரசிதான்; வேறு யாருமன்று. அவள் இயற்கையழகைக் கலந்து அழகுபெறும் ஆபரணங்களில் ஒன்றேனும் இப்பொழுது காணப்படவில்லை. கழுத்திலே மாற்றுயர்ந்த தங்கத்தாலி நாண்மட்டும் நெகிழ்ந்து கிடந்து மின்னுகிறது. அதற்குத் துணையாக ஒரு முத்துவடமாவது வேண்டாமா? இல்லை. விலைமதியாத வயிரமகரக் குழை பிரகாசித்த காதுகளிலே தூர்ந்துபோகாதபடி சிறிய முத்துத் தோடுகள் இருக்கின்றன. முன்னங்கைகளிலே பத்தரைமாற்றுப் பொன் வளைகள் கிடந்த தழும்புகளைக் காண்கிறோம். அந்த வளைகள் என்ன துர்ப்பாக்கியம் செய்தனவோ! அவற்றினிடத்தைச் சங்குவளைகள் கைக் கொண்டிருக்கின்றன. சிவந்த மெல்லிய விரல்களிலே அணிவிரல் ஒன்றில் ஒரு ரத்தினநெளிமட்டும் வில்லிடுகின்றது. கரையிலே பூத்தொழில் கனிந்த துகில்* உடுக்கும் சுகுமாரமேனியிலே மாசடைந்த மெல்லிய நூற்புடவைதானிருக்கிறது. இவ்விதம் கவலையுற்று அரசி யிருப்ப தைப் புலவர் 'உரியநிறங்களைக் குழைத்தெழுதாத வடிவுமட்டும் எழுதிய சித்திரம்போல' என்கிறார். இதைக்கேட்டதும் நமக்குக் கவிச்சக்கிர வர்த்தி இலங்கையிலே சோகம் நிரம்பிய அசோகவனத்திலே சீதாதேவி, தேவர்கள் சிறைநீங்கிச் சுகமடையத் தான் சிறையிருந்துவருந்தியநிலை யைச் சொல்லும்,—

"தேவு தெண்கடல் அமிர்துகொண் டனங்கவேள் செய்த
ஓவி யம்புகை உண்டதே ஒக்கின்ற உருவாள்"

என்ற சப்தசித்திரம்† நினைவுக்குவருகிறது. மணியின்பிரகாசத்தை

---

* துகிலென்பது அரசகுலத்துமகளிரும் அவர்போல்வாரும் உடுக்கும் சிறந்த சீலையென்பதை "வாழ்வரே, பட்டுந் துகிலும் உடுத்து" என்ற நாலடி நானூற்றுச்செய்யுளா லறிக.

† Word painting.

எடுத்துக்காட்ட வர்ணத்தகட்டை வைப்பதுபோலக் கவிச்சக்கிரவர்த்தி இதிலே ஒரு புதிய வேலைப்பாட்டைச் செய்திருந்தாலும் அதற்கு முன்மாதிரியாக இருந்தது நம்முடைய புலவர்திலகத்தின் திருவாக்கே யென்று கூறுவதில் நமக்கு ஆக்ஷேபம் இல்லை. மேலும் மகாகவிகளுடைய ஹிருதயமெல்லாம் பெரும்பாலும் ஒத்தபான்மை யுடையனவே யென்பதையும் நாம் நினைவுறுத்துகிறோம். நண்பர்களே! நமது ஹிருதயத்தை இவ்விதம் பளிச்சென்று தொட்டுத் தன்வசமாக்கிய இந்த மின்னல்நினைவை விட்டுவிட்டு இனி நம் புலவரைத் தொடர்வோம்; ஆம்; வண்ணங்களைக்கொண்டுதீட்டாத வடிவுமட்டும் எழுதிய சித்திரம் போல அரசி யிருக்கிறாள். அவள் துக்கத்துக்கு ஒரு எல்லை இல்லை. கண்ட கல்லும் சுவரும்கூடக் கலங்கி உருகும்படி பெண்கொடி சயனித்திருக்கிறாள். நாம் அந்தப்புரத்துக்குவரும்போதே நடுநிசி. அரசி இன்னும் துயிலவில்லை. தற்செயலாய் விதானத்தைப் பார்க்கிறாள்; அங்கே மதிக் கடவுள் தன் மனமொத்த காதல்மனைவி ரோகிணி என்பவளோடு சல்லாபித்திருப்பதாக எழுதிய சித்திரம் இருக்கிறது. அதைக் கண்டதும் அரசிக்குச் சோகம் கைம்மீறிவிட்டது. அவளுடைய நீலம்விரும்பும் கண்களிலே நீர்நிறைந்து மலர் உதிர்வதுபோலத் துளிக்கின்றது. இவ்விதம் பெருந்துயர்கூர அவளாசையின் கனியான வேந்தன் எங்குச் சென்றிருக்கிறான்?.

இதற்கு விடைகூறப் புலவர் நம்மை நகரத்துக்கப்பால் நெடுந்தூரம் அழைத்துச்செல்கிறார். அரசனோ அன்னியநாட்டிலே யுத்தம்செய்வதற்குப்போய்ப் பாடிவீட்டிலே தங்கியிருக்கிறான். ஆனால் அவன் இந்தக் குளிர்காலத்து நடுநிசியிலே அந்த யுத்தவிடுதியிலே என்னசெய்கிறான்? நல்ல அடக்கமான இடத்திலே மிருதுவான மஞ்சத்திலே படுத்து உறங்குகிறானோ? இல்லை. அல்லது அரசியைப்போலவே காதல்நோய் கொண்டு கவலைப்படுகிறானோ? காதலுக்கும் அவனுக்கும் வெகுதூரம். நாம் இந்நேரம் புலவரைப் பின்பற்றி அந்தக் கூடாரவரிசைகளுக்குப் போவோமானால் அவன் இதே நள்ளிரவிலே விடுதிக்குவிடுதி சென்று போரிற் புண்பட்ட வீரர்களைக் கண்டு அவர்கள் க்ஷேமங்களை விசாரிப்பதைப் பார்க்கலாம். பாருங்கள்! அதோ அரசன் வெண்கொற்றக்குடை மழைத்துளிகள் மேலேபடாமற் காக்க வருகின்றான். வாடைக்காற்று வேகமாக வீசுவதால், தீவர்த்திகளின்சுடர்கள் தெற்குநோக்கி எரிகின்றன.

அவன் அருகிலே வேப்பமலர்மாலைசூடிய வேற்படையைக் கையிலேந்தி வரும் சேனாபதி முன்னாட்போரிலே யுத்தம்புரிந்து புகழ்பெற்ற சூரர்களை ஒவ்வொருவராகத் தெரிவித்து அவர்கள் சௌரியத்துக்கு அறிகுறியாக விளங்கும் புண்களையும் காட்டுகிறான். அங்கே அரசன் குதிரைலாயத்துக்குவரும்பொழுது குதிரைகள் இரவும் பகலும்சேணமும் கடிவாளக் கயிறும் பூண்டு மேலேவிழும் மழைத்துளிகளை அலக்ஷியமாக உதறிக் கொண்டு எந்தநேரத்திலும் சேவகத்துக்கு ஆயத்தமாக இருப்பதைக் குறிப்பனபோலக் கனைக்கின்றன. இதோ! அரசன் சமீபத்தில் வந்து விட்டான். இடத்தோளிலிட்ட உத்தரீயம் நழுவுகிறது; அதை இடப் பக்கத்தே அணைத்துக்கொள்கிறான். தன் வலக்கையை உடைவாள் ஏந்திவரும் மறவன்தோளின்மேல் வைத்திருக்கிறான். சூரர்களுக்கு மனுஷ்யவர்க்கத்திலே வீரர் கோழை என்ற இவ் விரண்டன்றி வேறு வித்தியாச மேது? நல்லது; நாம் இப்பொழுது அரசனும் அரசியும் எப்படி இந்தப் பயங்கரமான குளிர்காலத்து இரவைக்கழிக்கிறார்களென்பதைப் பார்த்திருக்கிறோம். அவ்விதம் பார்த்தபின் அரசன் யுத்தத்தை இப்பொழுதே முடித்து வெற்றியோடு விரைந்துசென்று அரசியின் கண்ணும் மனமும் குளிரக் கலந்து வாழவேண்டுமென்று நம்மவரில் யாருக்குத்தான் புலவரோடுசேர்ந்து தெய்வத்தைப் பரவாமலிருக்க முடியும்?

இவ்விஷயத்தை அமைத்துத்தான் நம் புலவர் 'நெடுநல்வாடை' என்ற பெயரால் நூற்றெண்பத்தெட்டுவரிகளிற் பாடுகிறார். தலைவனைப் பிரிந்து வருந்துந் தலைவிக்கு ஒருபொழுது செல்வது ஒரு ஊழிக் காலம்செல்வதுபோ லிருக்குமாகையால் மன்னனைப் பிரிந்த கோப் பெருந்தேவிக்கு வாடையானது நெடுவாடையாயிற்று. மன்னன் பகையை வெல்வதற்கு வேற்றுப்புலத்திற் றங்கி வடிக்கண்ணாள் காதலை முற்றும் மறந்து வாகைமாலைசூடக் காத்திருந்தானாகையால் அவனுக்கு வாடை நல்லவாடை ஆயிற்று. அரசியின் துயரமும் அரசனின் வாகைவிருப்புமே இக்கிரந்தத்துக்கு ஜீவநாடியாகையால், புலவர் இதனை

'நெடுநல்வாடை' என்று வழங்கினர். தான் பாட எடுத்துக்கொண்ட விஷயத்துக்குப் பொருத்தமாகச் சூட்டிய இந்தப் பெயரே இவர் புலமைத்திறனை எடுத்துக்காட்ட வேறு உரையாணி வேண்டாமென்கின்றது.

புறநானூற்றிலே இவர் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடும்பொழுது அவன்சினத்துக்குப் பாமசிவனையும், வலிமைக்குப் பலராமனையும், புகழுக்குத் திருமாலையும், கருதியது முடித்தலுக்கு முருகக்கடவுளையும் உவமைகூறி, 'அன்னவன் யவனர்கள் குப்பியில்* அடைத்துக்கொண்டுவந்த மதுவை (சாராயத்தை) மகளிர் தங்கக்கிண்ணத்தில் ஊற்றி ஊட்ட வாழட்டும்' என்று சொல்லுவதும் அழகாகத்தா னிருக்கிறது. அந்நூலிலேயே வேறொருசெய்யுளில் இவர் திரிசிராப்பள்ளிக்குக் கிழக்கேயுள்ள பிடவூரை†

"மென்புலத்து வயலுழவர்
வன்புலத்துப் பகடுவிட்டுக்
குறுமுயலின் குழைச்சூட்டொடு
நெடுவாளைப் புல்லுவியற்
பழஞ்சோற்றுப் புகவருந்திப்
புதற்றளவின் பூச்சூடி
....
.........................அரியலாருந்து"

---

*Bottle.

†பிடவூர் தேவார வைப்புத்தலம். இப்பதிக்குத் தனிப்பதிகம் அருளாமல், பிறிதொருதலத்துப் பதிகத்தில்வைத்துப் பாடியிருப்பதால் இது, வைப்புத்தலமாயிற்று. அது, "தெய்வப்புனற்கெடிலவீரட்டமும் செழுந்தண்பிடவூரும்....தம்முடையகாப்புக்களே" என்று திருநாவுக்கரசுநாயனாரும், "பேரருளாளன்பிடவூரான், றம்மானே" என்று சுந்தரமூர்த்திநாயனாரும் கூறியதுகொண் டறிக.

என்பனவாக வருணித்துக்கூறுவதும், அப்பிடவூர்கிழார்மகன் பெருஞ் சாத்தன்* தன்னைப்போலவே புலவர்களையும் பாவிக்கும் பெருங் குணத்தை,

"....................தன்மனைப்
பொன்போன் மடந்தையைக் காட்டியிவனை
என்போற் போற்றென் றோனே"

என்று சொல்லுவதும் நல்ல நெடுநாள் விளைந்த இந்திரநீலக்கற்கள் போலவே திகழ்கின்றன. இவர்பாடிய பொருண்மொழிக்காஞ்சித்துறைப் பாட்டும் பலமுறை புடமிட்ட பொன்போலவே ஜ்வலிக்கின்றது. இன்னும் அவிழுக்கு (சோற்றுப் பருக்கைக்கு)க் கொக்கின் நகத்தை உவமை எடுத்துக் 'கொக்குகிர் நிமிரல்' என்பதும், சிவதைப்பூ† விரிந்திருப்பதற்கு வள்ளத்தை உவமைகொண்டு 'பாண்டிலொப்பிற் பகன்றை மலரும்' என்பதும், கோங்கரும்பு மலர்ந்திருப்பதற்குக் கைதேர்ந்த தட்டான் ரத்தினக்கற்களை இட்டுச் செய்த பொன்னாலாகிய சுரிதகஅணியை‡

---

*இவனது இப்பெயர் அவ்வூரிலே கோயில்கொண்டருளிய மாசாத்தனாரது பெயர்போலும். இந்த மாசாத்தனாரே, திருக்கயிலாயமலையிலே பரமசிவன் திருமுன்பிலே கழறிற்றறிவார்நாயனார் விண்ணப்பம்செய்து அரங்கேற்றிய 'திருவுலாப்புறத்தை'க் கூடவிருந்து கேட்டுவந்து அந்நூலை இவ்வூரிலே வெளிப்படுத்தினவர். அதனைச்,—

"சேரர்காவலர்விண்ணப்பஞ்செய்தவத்திருவுலாப்புறமன்று
சாரல்வெள்ளியங்கயிலையிற்கேட்டமர்சாத்தனார்தரித்திந்தப்
பாரில்வேதியர்திருப்பிடவூர்தனில்வெளிப்படப்பகர்ந்தெங்கும்
நாரவேலைசூழுலகினில்விளங்கிடநாட்டினர்நலத்தாலே"

என்ற பெரியபுராணச்செய்யுளாலறிக.

† சிவதைப்பூ வெண்ணிறமானதென்பதும் மணமில்லாததென்பதும், "அகன்றுறை அணிபெறப் புதலொடு தாழ்ந்த, பகன்றைப்பூ உறநீண்ட பாசடைத் தாமரை, கண்பொர ஒளிவிட்ட வெள்ளிய வள்ளத்தால், தண்கமழ் நறுந்தேற லுண்பவள் முகம்போல, வன்பிணி தளைவிடூஉம் வயலணி நல்லூர" என்ற கலித்தொகையடிகளாலும் 'அழகுபெறும்படி புதலொடு வந்து தாழ்ந்த மணமில்லாத பகன்றைப்பூ' என்ற அவற்றின் உரையாலும் அறிவது.

‡ திருகுபூப்போல அக்காலத்துள்ள ஒரு அணி.

ஒப்புக்கூறிக் "கைவல் வினைவன் றையுபு சொரிந்த, சுரிதக வுருவின வாகிப் பெரிய, கோங்கம் குவிமுகை அவிழ" என்பதும், சிவதை மலர்ந்தது; கோங்கு விரிந்தது எனக் கூறுவது பெண்மகளாகையால் அதற்குப் பொருந்த அவள் பழக்கத்திலுள்ள கிண்ணத்தையும் அணியையும் இங்கே உவமைப்பொருளாக்கியிருப்பதும் *உலாந்தா நாட்டிற் பட்டம்போட்ட உயர்ந்த வயிரங்கள்போல எழிலூறித்தான் பிரகாசிக்கின்றன. குறுந்தொகையில் ஒரு செய்புளிலே காதலன் தன் காதலியிடத்துக்கொண்ட கரைகடந்த அன்பைப் புலப்படுத்துவதற்கு இவர் கூறும்,—

"......................நாளுமென்
நெஞ்சுபிணிக் கொண்ட அஞ்சி லோதி
பெருநா ணணிந்த சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரி
னரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே"

என்ற அடிகள் காதலின்ரசத்தையே வடித்துக்காட்டிவிடுகின்றன. அகத்திலும் இவர்செய்யுட்கள் சுவையில் எவ்வளவும் விட்டுக்காட்டவில்லை. திருமுருகாற்றுப்படையோ முருகக்கடவுளது திருவருளையே நமக்குச் சொந்தமாக்கிவிடுகிறது. என்றாலும் அவைகளெல்லாம் இந்த நெடுநல்வாடைக்கு ஒப்பாகப்போகிறதில்லை.

மாரிக்காலத்துக் கிராமாந்தரவருணனையைப் பார்த்தால் நல்ல கோடையும் வாடைக்காலம்போலத் தோன்றுகிறது. வீதிகளிலும் வீதிகளில் வரிசைவரிசையாகஇருக்கும் வீடுகளிலும் நிகழ்வனவற்றை வாசிக்கும்பொழுது பேர்போன நாடகமேடையில் நாடகம்பார்ப்பது போன்ற உணர்ச்சியை உண்டாக்குகின்றன. அரண்மனையையும் வாயிலையும் கோயில்முற்றத்தையும் அதன் அயலே விளங்கும் மாளிகைகளையும் அந்தப்புரத்தையும் வருணிக்கும் பகுதிகளைப் பார்க்கும்பொழுது குச்சராத்துச்† சிற்பிகளது பணிகளையும் மொகலாயச்சக்கிரவர்த்தியினது

---

* Holland.

† Gujarat.

தாஜ்மகால்போன்ற சுந்தரமாளிகைகளையும் நம் நினைவுக்கு ஒருங்கே கொண்டுவருகின்றன. அரசியின் கட்டில்வருணனை மேல்நாட்டுமகாகவி யான மில்டனும் புகழும்படி இந்தப் பாரதநாட்டுப் பெருஞ்செல்வத்துக் குப் பொருந்தியதாகவே யிருக்கிறது. அரசியின் துயரைக்கூறும்,

"செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவர் இன்றுணை யோரென
உகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக்கலுழ்ந்து
* * * * * *
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
மாயிதழ் ஏந்திய மலிந்துவீழ் அரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவை"

என்ற பகுதிவாசிப்பவர்களுக்கு ஹிருதயபேதன துக்கத்தைக்கொடுத்து விடுகிறது. அந்த வாடைக்காலத்து நடுநிசியிலே அதேநேரத்திலே பாசறையிலே செழியன் புண்பட்டவீரர்களை க்ஷேமம்விசாரித்து உலாவி வருவதைக்கூறும்பகுதியைப் படித்தாற் பேடிக்குங்கூட எலும்புகளின் வழியே வீரவுணர்ச்சியூட்டி வாளெடுக்கும்ஆசையைக் கொடுத்து விடும்போ லிருக்கிறது. அதிகம் சொல்லுவானேன்; இந்த 'நெடுநல் வாடை' ஒன்றுதான் இயற்கைத்தேவியின் சௌந்தரியங்களுள்ளே முதன்மையான காலைஞாயிற்றின் சுந்தரம்போலச் சங்கத்துச் சான்றோர் செய்யுள்களிலெல்லாம் தலைசிறந்து விளங்குகிறது.

இவ்விதமான நமது நெடுநல்வாடை என்ற கோஹினூர்வயிரத்தின் ஜிலுஜிலுப்பும் ஒளிவீச்சும் அதைப் படைத்தவனுக்கு என்னசிறப்பை அளித்துவிட்டது என்று நீங்கள் கேட்கலாம். ஆம்; அது கேட்டுத் தெரியவேண்டுவதுதான்; என்னசிறப்பளித்தது? சங்கத்திருந்த புலவர் களுக்கெல்லாம் அக்கிராஸ்தானந் தான் வகிக்கும்படிசெய்தது. அது

மட்டுமா; ஆலவாயிற் சோமசுந்தரக்கடவுளே வந்து இவருடன் வாது செய்து இயலாமல் நெற்றிக்கண்ணைத் திறந்துகாட்ட, இவர் "நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்று சொன்னதாக ஒரு கதை புனைந்து இதைத் திருவிளையாடற்புராணக்கதைகளில் ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளும்படியும் செய்தது; அக்கதைதான் இது :—

பாண்டிநாட்டிலே மதுரைநகரத்திலே அரசுசெலுத்திய,—

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

குலத்துத் தோன்றிய வங்கியசூடாமணிபாண்டியன், இளவேனிற்காலத்திலே ஒருநாள் மாலைப்பொழுதிலே அந்தப்புரத்தின் அயலே உள்ள பூஞ்சோலையிலே, "ஆதரித் தமுதிற் கோல்தோய்த் தவயவம் அமைக்குந் தன்மை-யாதெனத் திகைக்கு மல்லான் மதனற்கும் எழுத வொண்ணா" அழகமைந்த தேவியுந் தானும் கைகோத்து உலவிக்கொண்டிருந்தான். பொதியத்தென்றல் மலர்களின்மணத்தை அளைந்து மெல்லென வீசிக் கொண்டிருந்தது. அந்நேரம் ஒரு புதியவாசனை அரசனுக்குப் புலனாயிற்று. அதுகண்டு மன்னன் 'இவ்வளவு மனோரம்மியமான மணம் பூவுக்கும் நறுநெய்க்கும் உரியதன்று; இப்புதுமணம் எங்கிருந்துவந்தது என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், தற்செயலாய்த் தன் தேவியின்கூந்தற்பக்கம் திரும்பினான். அப்பொழுதுதான் அது 'ஆயிரம் கண்ணிலாதார்க் கழகுகாண்பரிய' அளது நீள விழுந்துகிடக்கும் கரிய மெல்லிய கூந்தலின்வாசமென்று தெரிந்தது. பின்னும், அவனுக்கு அந்த வாசம் கூந்தலுக்கு இயற்கையோ செயற்கையோ என்ற சந்தேகம் வந்துவிட்டது. நெடுக நினைந்துபார்த்தான்; ஒன்றும் தோன்றவில்லை. உடனே அவன் தன் ஐயத்தை நீக்குகிறவர்களுக்கு ஆயிரம்பொன் தருவதாகக்கூறி அப்பொன்னைக் கிழிகட்டிச் சங்கமண்டபத்தில் தூக்கு

வித்தான். சங்கப்புலவர்களெல்லாம் பெரிதும் முயன்றுபார்த்தார்கள்; சரிப்படவில்லை. இப்படிப் பலநாள் சென்றன. அப்பொழுது தந்தையும் தாயும் அற்ற ஆதிசைவனான தருமி என்பவன் மதுரையிற் கோயில் கொண்டருளிய சோமசுந்தரக்கடவுளை வணங்கி "ஆண்டவரே! நான் ஒருத்தியைக் கலியாணம்செய்து வாழவிரும்புகிறேன். ஆனால் அதற்குப் பணம் இல்லை. நீர் பாண்டியன் ஐயம்நீங்கும்படி ஒருபாசுரம் பாடித்தருவீரானால் எனக்கு ஆயிரம்பொன் கிடைக்கும்; என்கருத்தும் நிறைவேறும் என்றான். பத்திவலையிற்படும் அப்பரமன் அதற்கிசைந்து,—

* "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே"

என்ற செய்யுளைச் செய்துகொடுத்தார். பார்ப்பான் அதை வாங்கிக் கொண்டுபோய் அரசனிடம் காட்டினான். அரசனும் அதுகண்டு மகிழ்ந்து கிழியை அறுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டான். வேதியன் சங்க மண்டபத்துக்குவந்து அச்செய்யுளைப் புலவர்களுக்கு வாசித்துக்காட்டினான். புலவர்களெல்லாம் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். ஆனால் அவர்களுக்கு அக்கிரஸ்தானம்வகித்த நக்கீரர்மட்டும் 'இப்பாட்டுக் குற்றம் உடையது, கிழியை அறுக்கக்கூடாது' என்று கூறிவிட்டார். என்ன செய்வான் அந்தணன்! பாவம்! பெரிதும் கவலையுற்று மீளவும் சொக்கலிங்கப்பெருமானது கோயிலை அடைந்து 'எந்தையே! கைக்கெட்டினது

---

* இதன் பொழிப்பு வருமாறு:— பூந்தாதைத் தேரும் வாழ்க்கையையும் அழகியசிறகுகளையு முடைய தும்பி! விரும்பியதைச்சொல்லாது (உண்மை யென்று) கண்டதைச் சொல்லு; நெருங்குதல்பொருந்திய நட்பினையும் மயிலினது சாயலினையும் செறிந்த பற்களையு முடைய இந்த அரிவையினது கூந்தலைக் காட்டிலும் வாசம் உடையவும் உள்ளனவோ? நீ அறியும் பூக்களுள்.

வாய்க்கெட்டவில்லையே' என்று நடந்தவற்றையெல்லாம் ஒன்றும்விடாமற் சொன்னான். அந்நேரம் பரமசிவன் அவனுக்கிரங்கி ஒரு புலவருருக் கொண்டு மாலும் அயனும் அறியாத மலரடியும் மணிமுடியும் மதுரை நகரத்தார்காணும்படி சங்கமண்டபத்துக்கு வந்து சங்கத்தலைவரான நக்கீரரைப் பார்த்து 'இப்பாட்டில் என்னகுற்றம் இருக்கிறது' என்றார். அதற்கு நக்கீரர் 'இப்பாட்டு, கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டென் கின்றது. கூந்தல் நறுநெய்யையும் பூவையும் கலந்துதான் பரிமளிக் கிறதேயொழிய இயற்கையில் அதற்கு வாசம்இல்லை' என்றார். புலவர் 'பதுமினியின்கூந்தலோ' என்ன; இவர் 'அதுவும் நறுநெய்யும் மந்தார மணமலரும் பெற்றுத்தான் மணக்கின்றது' என்றார். புலவர்: நீ நாளும் பூவும் பச்சிலையும் இட்டுப் பாவும் திருக்காளத்தியப்பாது சத்தியாகிய ஞானப்பூங்கோதையாரது கூந்தலோ' என்ன, இவர் 'அதுவும் அவ் விதமே' என்றார். வந்துவிட்டது கோபம். புலவர் தம் நெற்றிக்கண்ணைக் காட்டினார். அதற்கெல்லாம் அஞ்சினவரா நமது நக்கீரர்? 'இந்திரனைப் போல உடல்முழுதும் கண்களைக் காட்டினாலும் நான் அஞ்சப்போவ தில்லை. உமது பாடல் குற்றமே குற்றம்' என்று கூறிவிட்டார்.

ஆகையால் வாசகர்களே! நீங்கள் இந்த அரிய 'நெடுநல்வாடை' என்ற ஜோதிமணியைப்பற்றி எழுதிய இவ்வியாசத்தை வாசிப்பதோடு நிறுத்திவிடாமல் மூலகிரந்தத்தையும் வாசிக்கவேண்டுமென்று நான் சொல்லப்போகிறதில்லை. நீங்களே அதனைத் தேடி அது பத்துப்பாட் டில் ஏழாவது என்று கண்டு வாசிக்கப்போகிறீர்கள். அங்ஙனம் வாசிக் கும்பொழுது இவ்வாராய்ச்சியும் உங்களுக்கு உதவியாகலாம்.

சி. வீரபாகுப்பிள்ளை.